பக்கங்கள் 14 விலை ரூபா 4-00

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 32 வைகாசி 13 துல்ஹஜ்தா பிறை 2 இதழ் 104

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 27-05-1991

மலிவு விற்பனை!
அன்பளிப்புகள்!

வற்றாத அருள்கொண்ட
வற்றாப்பழை கண்ணகை

பொங்கல் தினத்தன்று ஆலயத்தில் மில்க்வைற் மேலுறைகளுக்குப் பெறுமதியான அன்பளிப்புகள். இன்றே மேலுறைகளைச் சேகரியுங்கள்.

- மில்க்வைற் யாழ்ப்பாணம்
(சி-767)

பாவித்தவர்கள் மீண்டும் கேட்பது மில்க்வைற் நீல சோப் புதுப் பொலிவு! நறுமணம்! நுரை வளம்கொண்டது. மேலுறைகள் தருவது அரும் பரிசு.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.
(சி- 767)

★ இலங்கை விவகாரம் ★ மத்திய-மாநில அரசுகளுக்கிடையில் மோதல்

# 'ரோ'வின் நடவடிக்கை குறித்து பிரதமர் சிங்-கருணாநிதி மோதல்

## குற்றச்சாட்டுக்கும் கண்டனம்

(புதுடில்லி)

**இந்திய புலனாய்வுத்துறை 'ரோ' விவகாரம் குறித்து பிரதமர் திரு. வி. பி. சிங்கிற்கும் தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதிக்குமிடையில் பெரும் கருத்து முரண்பாடு ஏற்பட்டு வருகிறது. முதல்வர் திரு. மு.கருணாநிதியின் அண்மையகுற்றச்சாட்டுக்குபிரதமர் திரு. வி. பி. சிங் கண்டனமும் தெரிவித்துள்ளார்.**

இலங்கையில் கடந்த காலங்களில் நிலைமை பின்னடைவதற்கும், இந்திய மத்திய அரசுக்கும் தமிழக அரசுக்குமிடையில் மோதலை உருவாக்கவும் 'ரோ' முனைந்துசெயல்பட்டுவருவதாகவும் தமிழக முதல்வர் திரு மு. கருணாநிதிபகிரங்கமாக சட்டசபையில் குற்றம்சாட்டி உடனடியாக விசாரணைகளை நடாத்தவேண்டுமென்று பிரதமரை கோரியதுடன் அவரை இதுதொடர்பாக சந்திக்கப் போவதாகவும் அறிவித்திருந்தார்.

எனினும் திரு. கருணாநிதியின் இக்குற்றச்சாட்டு வெளிவந்து ஒரு வாரத்தில்; ஒரு நாட்டின் புலனாய்வுத் துறை குறித்து பகிரங்கமாக மாநில முதல்வர் ஒருவர் குற்றம்சாட்டுவது வன்மையாக கண்டிக்கப்

(14-ம் பக்கம் பார்க்க)

## "தமிழருக்கு எதிரான சட்டங்களே நாட்டை சீரழித்தது"

(கொழும்பு)

"அரசியல் லாபம் கருதி இனவாத அடிப்படையில் இந்திய வம்சாவழியினர்க்கும், இலங்கைத் தமிழர்களுக்கும் எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டமும், வது திருத்தச்சட்டமும், நாட்டின் பயங்கரமான படுகொலைகளுக்கும், பேரழிவுகளுக்கும் காரணமாயின தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்திப் போரடுவதற்கு வித்திட்டவை இச்சட்டங்களே! மக்கள் பிரதிநிதிகளான நீங்கள் கடந்த கால அனுபவங்களைக்கொண்டு விவேகமாகச் செயற்படாது விட்டால், அனைவரினதும் எதிர்காலம் மிகவும் பயங்கர

(14-ம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளுடன் இராணுவ அதிகாரி பேச்சு

(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்கு மாகாண இராணுவப் பொறுப்பதிகாரி பிரிகேடியர் எல். எம். தளுவத்த சில தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்புக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

இதன்போது கிழக்கு மாகாணத்தில் இராணுவ முகாம்கள் பலப்படுத்தப்பட்டு வருவது குறித்தும் துரித சிங்கள குடியேற்றம் குறித்தும் புலிகளின் தரப்பிலும், இராணுவ தரப்பில் அண்மையில் இப்பகுதியில் படையினர் தடுத்து வைக்கப்பட்டது குறித்தும் பேச்சுக் நடைபெற்றிருக்கலாமெனவும் ஊர்ஜிதமற்ற தகவலொன்று

(14-ம் பக்கம் பார்க்க)

## ஜே. வி. பி தலைவரை காணவில்லை

(கொழும்பு)

பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்ட ஜே வி. பி முக்கிய தலைவர் ஒருவரை காணவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வாரத்திற்கு முன் வீரகீர்த்திய என்ற இத் தலைவர் தற்போது எந்த தடுப்பு முகம்காளிலும் தடுத்துவைக்

(14ம் பக்கம் பார்க்க)

## "உங்களது விடுதலை தமிழீழத்துக்கு உதவட்டும்"

- ஆஞ்சநேயர்

(யாழ்ப்பாணம்)

"எதிர்காலத்தில் யுத்தம் ஒன்று ஏற்பட்டால் முகம் கொடுக்கவும், அமையப்போகும் தமிழீழத்துக்கு உங்களது பங்களிப்பைச் செய்வீர்கள் என்று கருதியும், உங்களை விடுதலை செய்கின்றோம்"

இவ்வாறு யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்ட 108 பேரை விடுதலை செய்யும் நிகழ்ச்சியில், தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி வலிகாமப் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் குறிப்

(14ம் பக்கம் பார்க்க)

தமிழர்கள் விவகாரத்தில்

## அமைச்சர்கள் ரஞ்சன்-ஹமீத் கருத்து முரண்பாடு?

(கொழும்பு)

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்னவுக்கும் நீதி அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத்துக்குமிடையில் தமிழர்கள் விவகாரம் குறித்து கருத்து மோதல்கள் இடம்பெற்றுள்ளதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்துள்ளது:

எனினும் இவ்வாறு பிளவொன்றை தமக்கும் அமைச்சர் ஹமீத்துககுமிடையில் ஏற்படுத்த எதிர்க்கட்சிகள் தீவிரமாக செயற்பட்டு வருவதாகவும் அமைச்சர் திரு. ரஞ்சன்

(14ம் பக்கம் பார்க்க)

## கிழக்குப் பகுதிக்கு பாக். தூதர் திடீர் விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கான பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகர் ஜனாப் எம். அடாட் ஹூசைன் கடந்த வியாழக்கிழமை கிழக்கு மாகாணத்திற்கு திடீர் விஜயமொன்றைமேற்கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இத்திடீர் விஜயத்தினபோது மட்டக்களப்பு, திருமலை பகுதிகளுக்கும் அவர் விஜயம்செய்து பல இடங்களை பார்வையிட்டதாகவும் கூறப்படுகிறது.

இதன் ஒரு கட்டத்தில் தூதுவரும் பாதுகாப்பு வீரர்களும் நிலாவெளி பகுதியில் சுமார் 45 நிமிட நேரம் தடுத்துவைக்கப்பட்டு பின் பாதுகாப்பாக அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### சிறப்பு மலர்

இணுவில் பரராச சேகரப் பிள்ளையார் தேர்த் திருவிழா சிறப்பு மலர் உள்ளே.

## தேசியக் கொடி எங்குமே பறக்கவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய வீரர் தினமான 22ம் திகதி அரச அலுவலகங்கள் எதிலும் தேசியக் கொடி பறக்கவிடப்படவில்லை.

பொலிஸ் நிலையம், கல்லடி இராணுவ முகாம், விமான நிலையம் ஆகிய பாதுகாப்பு நிலையங்களில் மட்டுமே தேசியக் கொடி பறக்கவிடப்பட்டிருந்தது.

அன்றைய தினம் சகல அலுவலக்ங்களிலும் தேசியக்கொடி

(14-ம் பக்கம் பார்க்க

## யாழ் .மாவட்ட அபிவிருத்திக்கு ஐந்தாண்டுத் திட்டம் அமுலாகிறது

(மா. அ. கி. துரைநாயகம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஐந்தாண்டு பொருளாதாரத் திட்டம் ஒன்று அமுல்படுத்தப் படவிருக்கிறது. 1990ம் ஆண்டு முதல் 1994ம் ஆண்டுக்கான காலப் பகுதியில் இந்தத் திட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. விவசாயம், காட்டுவளம், கடற்றொழில், கைத்தொழில், சமூக பொருளாதார அமைப்பு துறைகள் ஆகியவற்றை இந்தத்திட்டம் உள்ளடக்கியிருக்கும்.

இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதற்காகயாழ் மாவட்டம் அதன் மாவட்ட மட்டத்தில் ஐந்தாண்டுக்கான பொருளாதாரத்திட்டம் ஒன்றைத் தயாரித்து எதிர்வரும் ஜூன் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் மாகாணத்திட்டமிடல்

(14-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கில் மோதலை ஏற்படுத்த மீண்டும் முயற்சி?

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பகுதியில் மீண்டும் மோதல் ஒன்றை உருவாக்க எதிர்கட்சிகள் முயற்சித்து வருவதாக அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர். சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற பேச்சுக்கள் இவ்விதத்தில் அமைந்

(14-ம் பக்கம் பார்க்க)

# வரி எம்பரம்

## விற்பனைக்கு

தங்கள் இல்லங்களில் காலை எழு்தவுடன் ஈழநாடு பத்திரிகை படிக்க தொடர்பு கொள்ளுங்கள்: ஸ்ரீ முருகன்ஸ் சிவன்கோவில் வீதி, காரை நகர். (சி-3903)

ஒரு வருடம் பாவித்த 49 C. C. கொண்ட புத்தம் புதிய (Brand New) மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாப்பாணம். (சி 3802)

3'', 4'' கொங்கிறீட் கற்கள் விற்பனைக்குண்டு. S.சாமிநாதர், இல. 20, மாட்டின் றோட், யாழ்ப்பாணம். (சி 3912)

## சிறுவர் நவீனம்

மீராவெளியீடு ''இராவணன் கோட்டை'' மாஜாஜால, மந்திர தந்திர, வீர தீரச் செயல்கள் நிறைந்த சிறுவர் நவீனம். 20/- ரூபா. விற்பனையாகின்றது. ராஜன் புத்தகசாலை, சிறீகாந்த் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-3891)

## தேவை

காரைநகரில் வர்த்தக நிறுவனமொன்றிற்கு முகாமையாளர், விற்பனையாளர், கணக்கு லிகிதர் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 3902 மே/பா. ஈழநாடு யாழ்ப்பாணம். (சி-3902)

மோட்டார் சைக்கிள் விற்கும் கடைக்கு ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரிந்த பெண் பிள்ளை தேவை. தொடர்புகொள்ளவும்; Our Lady Store, 601, Hospital Road, Jaffna. (சி-3901)

## கல்வி

5 — 10 மாணவ மாணவிகளைக் கொண்ட சிறுகுழுக்களாகவோ அல்லது தனிப்பட்டமுறையிலோ ஆங்கிலக் கல்வி கற்க விரும்புபவர்கள் விபரங்களுக்கு சுயவிலாசமிட்ட முத்திரை ஒட்டிய என்வலப்புடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 3801 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-3801)

## விற்பனைக்கு

ஜப்பானிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட CD 50 Honda Chaly, Yamaha Mate 50 விற்பனைக்குண்டு Our Lady Store, 601, Hosbital Road, Jaffna. (சி 3900)

## முதலாம்பிள்ளை

நோர்வேயின் தமிழ் நாதம் வானொலி நிலையம் நடத்திய வானொலி நாடகப்போட்டியில் முதலாம் பரிசு பெற்ற அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் இரண்டு வானொலி நாடக நூல்கள்.

1. கெட்டிக்காரரர்கள் 25/-
2. முதலாம்பிள்ளை 30/-

19 நாடகங்கள் விற்பனையாகின்றன. (சி 3814)

## வகுப்பு

GERMAN LANGUAGE பட்டப்படிப்புகளைத் தொடர்வதற்கு உதவும் முகமாக மேற்படி வகுப்புகள் 01 - 6 - 90 ஆரம்பமாகின்றன தொடர்பு: Sabanayagam, Director of Studies, 33, Kandy Rd, Jaffna. and Sornalingam, Secretary, 4, Kopay, Lane, K. K S Road, Vannarpannai, Jaffna. German Cultural, Association, Jaffna. (C-3910)

## தவறிவிட்டது

19-05-90 இரவு கொழும்பு வாழ். மெயில் புகையிரதத்தில் புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைச் சேர்ந்த மோகனபாலன் என்பவர் தனது மணிப்பேசை தவறவிட்டுள்ளார், கண்டெடுத்தவர் தயவு செய்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். இதனுள் முக்கிய சிறிய அளவிலான ஆவணங்கள் உண்டு. தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-3900)

கஸ்தூரியார் வீதிக்கும், கே. கே. எஸ். வீதி, 8ம் கட்டை, அளவெட்டிக்கும் இடையில் 70 போஸ்காட் அளவு புகைப்படங்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து S. நடராசா, பிள்ளையார் ஸ்ரோர்ஸ், 31, மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும். (சி 3914)

## பிரிட்டிஷ் மக்களின்
# மருத்துவ உபகரணங்கள் யாழ்.மக்களுக்கு செப்டம்பரில் கிடைக்கும்
## -பிரிட்டிஷ் தூதுவர்

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாணபகுதி நோயாளிகளின் நன்மைக்காக பிரிட்டிஷ் மக்கள் பலவித மருத்துவ உபகரணங்களை சேகரித்து ஒன்றுக சேர்த்து அனுப்பி வைத்துள்ளார்கள். கப்பல் தாமதம், இறக்குமதி தாமதம், சுங்க தாமதம் ஆகிய வற்றையெல்லாம் தாண்டி செப்ரெம்பர் மாதத்திற்குள் யாழ்பாணத்திற்கு இவை கிடைத்து விடுமென நம்புகிறேன்.''

இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் தூதர் திரு. டேவிட் கிளாட்ஸ்ரன் நேற்றுமுன்தினம் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற யாழ். மருத்துவ சங்கத்தின் எட்டாவது ஆண்டு கூட்டத் தொடரின் நிகழ்ச்சில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

இந்தப் பகுதியிலுள்ள மருத்துவாகளுக்கு ஏற்பட்ட பலவித கஷ்டங்களை நான் அறிவேன். உங்களுக்கு ஏற்பட்ட சங்கடமான நிலைகளையும் நான் உணர்கிறேன். இந்தப் பிரதேசத்தில் நடப்பவைகளை பற்றி அறிய எனக்கு ஒருவித ஆவலாய் இருந்தேன். இந்தப் பிரதேசம் அமைதியாக இருக்குமென்று நம்புகிறேன் என்ருர்.

இந்த வைபவத்தில் தலைமை வகித்த டாக்டர் ஏ. விஜயரத்தினம் வரவேற்புரையில் கூறியதாவது:

பிரிட்டிஷ் மருத்துவர்கள் மருத்துவத் துறைக்கு பலவித முன்னேற்றங்களை ஆற்றியுள்ளார்கள். இலங்கையில் ஆட்சி செய்த பிரிட்டிஷ் கவனர் மக்ன்சி இலங்கையில் மருத்துவ கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமென்று சிபார்சு செய்தவர் அன்று தொடக்கம் இன்று வரை பிரிட்டிஷ் மக்கள் எமது மருத்துவத் துறைக்கு ஆற்றும் சேவைக்கு நன்றி தெரிவிக்கிறேன் என்ருர். (153)

## நூலரங்கு

### செகராசப்பிள்ளையார் பிள்ளைத்தமிழ்

ஆக்கியோன்: ச. வே. பஞ்சாட்சரம்.

வெளியீடு: இணுவில் இளந்தொண்டர் சபை.

சுமார் 196 இலக்கிய வடிவங்களிலே பிள்ளைத்தமிழ் ஒரு வடிவம். பாட்டுடைத் தலைவனைக்குழந்தையாகப் பாவனை செய்து பத்துப் பிரிவுகளிலே வைத்துப் பாடுதல் பிள்ளைத் தமிழ் இலக்கியமாகும்.

இணுவில் செகராசப்பிள்ளையாரைக்குழந்தையாக வைத்து அக்கோவிலின் பெருமைகளைத் தொகுத்துப் பாடல்களை ஆக்கியுள்ளார் ஆசிரியர். காலத்தோடு ஒட்டிய பல கருத்துக்களும் இடம்பெறத் தவறவில்லை.

தமிழ் அவர் நாவில் அழகுத் தமிழாகப்பிறந்து பொருட்சுவையோடு கலந்து பிள்ளையார் பெருமையாக மிளிர்ந்துள்ளது.

மதிப்புரை எழுதிய கலாநிதி பாலசுந்தரம் பிள்ளைத் தமிழ் பற்றிய ஆய்வுரை வழங்கியதோடு, ஈழத்தில் தோன்றிய பிள்ளைத்தமிழ் நூல்களின் தொகுப்பையும், விநாயகர் வழிபாடு பற்றிய குறிப்புகளையும் தந்துள்ளார். இவை தமிழ் மாணுக்கருக்குப் பெரிதும் உதவக்கூடும்.

### திருக்கேதீச்சர மான்மியம்

ஆக்கியோன்: பண்டிதர் மு. கந்தையா.

வெளியீடு: திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபை.

விலை: ரூபா 50/-

இந்த நூல் 12 படலங்களாக உருவாகியுள்ளது. ஒவ்வொரு படலத்திலும் பல சுவையான பாடல்கள் உள்ளன. மொத்தமாக 800பாடல்கள் உள்ளன. இது புராதன வரலாறு கூறும் முதற்காண்டமாகும்.

இதனைத் தொடர்ந்து ஐந்து காண்டங்கள் வெளிவர உள்ளன. வரவுள்ள காண்டங்களில் கல்வெட்டுச் சாசனக் குறிப்புகளும் சேர்க்கப்படவுள்ளன.

இந்தக் காண்டத்திலுள்ள பாடல்கள் பழமையும், புதுமையும் கலந்த கருத்து வளத்தாலும் சொல்வளத்தாலும் ஆனவை. நாட்டுப் படலம் முதல் நகர, பாலாவி பாயிரம், திருக்கைலாயம், கேது பூசை, துவஷ்டா பூசை துவஷ்டா அரசு, மண்டோதரி பேரருள் பெற்றமை, மாந்தை விலாசம், விஜயன் வருகை மட்டும் படலங்கள் ஆக்கப்பட்டுள்ளன.

மான்மியம் என்ற தலைப்பைப் பார்த்ததுமே பழைய புராணப் பாணியைத்தான் நினைத்துக்கொண்டு படிப்போருககு அதிசயம் காத்திருக்கும்.

இங்கு இலக்கியச் சுவையைக்காணலாம்; வரலாற்றுக் குறிப்புகளைக் காணலாம்; தொன்மைச் சிறப்புகளைக் கேட்கலாம்; மாந்தையின் பெருமையை உணரலாம்.

சபைத் தலைவர் மு. ஞானப்பிரகாசத்தின் முகவுரையும், அருஞ்சொல் விளக்கமும் அழகான அட்டையும் நூலை அணிசெய்கின்றன.

--சிவா

# சட்டவிரோத மின்பாவனை: இளம் தாய் பலியானுர் !

(மட்டுவில்)

தாகத்திற்குத் தண்ணீர் அள்ள கிணற்றுக்குச் சென்ற குடும்பப் பெண் ஒருவரை சட்டவிரோத மின்பாவனைக்காகக் கொழுவப்பட்ட மின் தொடர் தாக்கி அப்பெண் துடிதுடித்து மரணமான சம்பவம் வரணி நாவற்காடு எனுமிடத்தில் நிகழ்ந்துள்ளது.

நாவற்காட்டைச் சேர்ந்த வைரவன் சீதேவி (42 வயது) என்பவரே மரணமானவராகும்.

இறந்தவரின் மரண விசாரணையை க. சின்னத்தம்பி நடத்தினுர். நாவற்காடு பகுதி கிராமசேவையாளர் திரு. வே. நாகதேவன் சாட்சிகளை நெறிப்படுத்தினுர்.

மின்சாரம் தாக்கியதால் ஏற்பட்ட மரணமென்று மரண விசாரணை முடிவில் தீர்ப்பளிக்கப்பட்டது. (82)

## ஒத்துமாறல் [Mutual Transfer]

கொழும்பு மாவட்டத்தில் கற்பிக்கும் வணிக பட்டதாரி ஆசிரியை அதே தர ஆசிரியையுடன் யாழ். மாவட்டத்திற்கு ஒத்துமாற விரும்புகிருர். ஒத்துமாற விரும்புகிறவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

ந. க. கிருஷ்ணமூர்த்தி
தோதரை,
தெல்லிப்பழை.

(சி 3911)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



★

தோற்றம்: 7-2-36

மறைவு: 31-5-87

திதி: 27-5-90

★

### சிவராமலிங்கம் செல்லத்துரை

(வன பரிபாலன உத்தியோகத்தர், கிளிநொச்சி)

அன்பு டடாவே, என்ருே ஒரு நாள் உங்களிடம் வருவோம் என்ற நிம்மதியில் வாழ்கின்ருேம்.

அன்பு மனைவி,
பிள்ளைகள்: லதா, மயூரன், ஜனகன்.
67, பலாலி வீதி,
கந்தர்மடம்.

(சி 3898)

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி

மறைவு : 27-05-84



### திருமதி மங்கையற்கரசி கனகரட்ணம்

(விஞ்ஞான ஆசிரியை)

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறேன்:

கணவர்: வே. கனகரட்ணம்
A2/F4. புளூமண்டல் மாடி,
கொழும்பு-13.

(சி 3907)

ஈழநாடு
வாரமலர்
EELANADU VARA MALAR

# ஆங்கிலமும் தமிழாமோ?

# சொல்லாய்வு புலப்படுத்தும்

# சுவையான செய்தி

பல்வேறு மொழிகளின் தோற்றம் முதன் மொழி வகுத்த மாந்தன் திராவிடன் என்பதும் அவன் வகுத்தமொழிதிரமினம்-தமிழ் என்பதும் பெறப்படும். நிலை பெயர்ந்தோர் குடியேறிய நாடுகளில் நிலவிய சூழ்நிலை தட்பவெப்ப வேறுபாடு முதலியன மொழியின் ஒலிச் சிதைவுக்குக் காரணமாக அமைந்தன. குளிர்ந்த நாடுகளில் வதிவோர் வெப்ப வலய நாடுகளில் பயிலும் மொழிச்சொற்களை அவற்றின் சரியான ஒலி தோன்ற ஒலிக்க முடியாது இடர்ப்படுவதை இன்றும் காணலாம். யாழ்ப்பாணம் - யாவ்ன, மட்டக்களப்பு – பட்டிக்கலோ, நீர்கொழும்பு - நிகம்பு ஆக ஒலிச் சிதைவு பெற்றமைக்குக் காரணம் இதுவே. காலப் போக்கில்ஒலிச்சிதைவு பெற்று வேறுபட்ட புறத்தோற்றமுள்ள மொழிகள் உலகெங்கும் கிளைத்தன. இவ்வாறு மாற்றமடைந்த போதும் சொற்களின் வேர் பொருள் என்பன மாற்றமடைவதில்லை. அண்மைக்காலத்தில் சொற் பொருளாய்வாளர்கள் தெரிவித்த கருத்துக்கள் இக் கூற்றுக்குச்சான்ருக உள்ளன. யப்பான் நாட்டில் அதன் வட தென்பகுதிகளிலுள்ள கிராமப் புறங்களில் பயிலும் மொழியில் ஒலிச்சிதைவுற்ற நிலையில் ஏராளமான தமிழ்ச்சொற்கள் காணப்படுவதாக, மொழியியற் துறைப் பேராசாளுக இருந்த சுசுனே ஒனே என்பவர் கருத்து வெளியிட்டுள்ளார். ஆபிரிக்க நாட்டிலுள்ள மொழியியல் அறிஞர்களுள் சிலரும் தங்கள் மொழியிலும் தமிழின் செல்வாக்கு மிகுதியாகக் காணப்படுவதாகக் கூறியுள்ளனர். மெக்சிக்கோ, பேரு ஆகிய நாடுகளிலும் வழக்கிலுள்ள மொழிகளில்திராவிடமொழிச் சொற்கூறுகள் பல உள்ளன. தென்அமெரிக்காவில் ஒருகால் சிறந்தோங்கிய மாயா பண்பாட்டில் தமிழரது சமயக்கூறுகள் மட்டுமன்றி மொழிக்கூறுகளும் காணப்பட்டன. இவை அனைத்தையும் தொகுத்து நோக்கும்போது லெமூரியாக் கண்டமே நாகரிகத்தின் தொட்டில் என்பதும் முதன் மாந்தன் அங்கு வகுத்த முதல் மொழி தமிழ் என்பதும் ஐயம் திரிபுக்கிடமின்றி உறுதியாகின்றது. தொடக்கத்தில் உலகெங்கும் ஒரே மொழியே பயின்று வந்த தென்பதை பரிசுத்த வேதாகமத்தின் ஆதியாகமத்தின் 11ம் பகுதியில் கூறப்பட்டுள்ள 'உலகம் முழுவதும் ஒரே மொழியும் ஒரே பேச்சுமாகஇருந்தது, என்னும் கூற்று மேலும் உறுதியாக்குகிறது. ஒப்பிட்டு நோக்கு; எந்த மொழியையும் அதனளவில் ஆய்வதாற்பயனில்லை. ஒரு மொழியை அஃதொத்த வேருெரு மொழியோடு ஒப்பிட்டு ஆய்ந்தால் மட்டுமே, அவற்றிடையே நிலவும் தொடர்பு பொதுமை, ஒலிச் சிதைவு, பொருள், இன்றைய வடிவம் என்பன பற்றிய தெளிவான கருத்துப் புலனுகும். இரு மொழிச் சொற்களின தும் வேர் அதன் ஒலி அது குறித்த பொருள் என்பன வற்றின்அடிப்படையில் ஆய்வு நிகழும் போது உலகளாவிய மொழிகளிடையே இழையோடியிருக்கும் பொதுமை பெருவியப்பூட்டுமளவுக்கு எளிதில் புலப்படும். இத்தகைய ஆய்வுக்கு ஒரு மொழியின் இலக்கியத்தையோ இலக்கணத்தையோஎடுத்தாளுதலாகாது. மொழிவளர்ச்சியின் மிக உயர்ந்த நிலையிலேயே இலக்கியம் பிறக்கும். இலக்கியம் பலகாலம் பயின்ற பின்னரே இலக்கணம் அதனின்றும் வகுக்கப்படும். ஆகவே இவை மொழியின் பிற்கால நிலையை குறிப்பனவேயன்றி அதன் தோற்றம்; படிமுறை வளர்ச்சி என்பனவற்றைப் புலப்படுத்துவனவாகஅமையா இந்த வேறுபாட்டைக் கருத்துள் கொள்ளத் தவறியமையே பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்களும் அவர் கூட்டத்தினரும் பெருந்தீங்கு விளைக்கும் தவருன கருத்துகளைத் தெரிவித்தமைக்குக் காரணமாகும். புதிய ஆய்வுகளின் வழிப்பிறந்த தெளிவு இக்கருத்துக்கள் புறக்கணிக்கப்பட வேண்டியன என வலியுறுத்துகிறது.

## ஆங்கிலமும் தமிழும்

ஆங்கிலத்துக்கும்தமிழுக்கும் தொடர்புண்டோ எனப்பலர் வியப்போடு வினவலாம். உலகமொழிகள் அனைத்திலிமிருந்து பெறபட்ட சொற்கள் இன்று ஆங்கில மொழியில் பயின்று வருகின்றன. ஆகவே ஆங்கிலச் சொற்களை ஆராய்ந்தால் பலமொழிச் சொற்களின் பிறப்பிடத்தையே கண்டறியலாம். இத்தகைய ஆய்வில் ஈடுபட்ட சொற்பிறப்பியல்

(12ம்பக்கம் பார்க்க)

- வீ. ம. க. -

நமது பார்வையில்...

## இலக்கியமும் நோக்கும்!

இலக்கியம் பற்றிய வடிவம், நோக்கம் மொழி பற்றிய விவாதம் முடிவில்லாதது.

அரசியல், சமூக மாற்றங்களுக்கேற்ப இவை பற்றிய விவாதமும் வளரும்; தேயும்.

பொழுதுபோக்குவதற்கு உதவுவது இலக்கியம்; எனவே பொழுதை இன்பமாகப் போக்குவதற்கு மாத்திரம் இலக்கியம் அமைந்தாற் போதுமா?

மனதிற் பட்டதை, உள்ளத்திற் கிளர்ந்ததை அப்படியே சொல்லிவிட எழுத்தாளனுக்கு உரிமையுண்டு என்பது இன்னேர் வாதம்!

படிப்பவர்கள் தமது ரசனைக் கேற்பத் தெரிந்தெடுக்கும் சுதந்திரம் இருப்பதால் எழுதுபவனுக்குப் பொறுப்பில்லாமற் போகின்றதா?

பொழுது போக்குவதற்காகவெனக் கையில் எடுத்து வாசிப்பவை சுவையாக இருந்தாலும், கீழ்த்தர உணர்ச்சிகளைக் கிளறுபவையாக இருந்துவிட்டால் அதனுற் கேடுவிளைந்துவிட்டால் அதற்குரிய குற்றம் யாரைச் சார்ந்தது?

சமுதாயத்தைக் கெடுக்க யாருக்கும் சுதந்திரம் கிடையாது என்பது சிலரது வாதம்.

நல்ல நோக்கோடும் இலக்கியம் படைக்கப்படவேண்டமா?.

---

### கம்பன் காவியம்பற்றிய கருத்துரை

# 'மானுடம் வென்றதம்மா'

மானுடத்திற்கும் தெய்வீகத்திற்கும் இடைப்பட்ட நிலையே அவதாரம். சகல வல்லமைகளையும் பெற்றுத் தன்நிகரில்லாது. விளங்குவது தெய்வீகம், மாசு, மறு என்பது அதற்குக் கிடையாது. குற்றம் என்ற இயல்பே தெய்வீகத்தை நெருங்க முடியாது. இதற்கு நேர்மாருக குற்றங்களின் இருப்பிட மாக, தனுல் பரம் பொருளின் கருணையின்றி துரும்பைக்கூட அசைக்க முடியாது என்பதை உணராமலே வாழ்ந்து, எல்லா முயற்சிகளிலும் தோற்று 'பின் வினைகள்' சார பிறந்துழல்வதுமானுடம். இவை இரண்டிற்கும் இடையிலே, தெய்வத் தன்மையானது மானுடத்தை உயர்த்துவதற்காக பூமியில் இறங்கி வந்து, தான் தெய்வம் என்பதையே உணராது மானுடத்திற்குரிய பிறப்பு, இறப்பு, இன்ப. துன்பங்களுக்கு ஆட்பட்டு, மானுடத்துக்கு ஏற்படக்கூடிய சகல பிரச்சனைகள், சிக்கல்களிற்கும் முகங் கொடுத்து வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து, தன்னைச் சார்ந்திருக்கும் மற்றய மானுடங்களுக்கு ஓர் முன் உதாரணமாக அமைந்து செல்வதே அவதாரத்தின் தலையாய இயல்பு.

காப்பியம் ஒன்றிலே பாட்டுடைத் தலைவனுகக் கொள்ளப் படுபவன் மானுடன், அல்லது மானுட நிலையிலே உயர்ந்திருக்கின்ற அவதார புருஷனுக மட்டுமே இருக்கவேண்டும். இந்த நிலையிலே காலங்காலமாக சிறந்த காவியங்களை இயற்றி வந்த பெரும் புலவர்கள் மிகக் கவனம் கொண்டிருந்தனர் என்பது வெள்ளிடைமலை, காவிய நாயகனின் இயல்புகள், வெற்றிகள், தோல்விகள் சாதாரண ஒரு மனிதனுக்கு வாழ்விலே ஏற் எற்படக்கூடிய பிரச்சனைகளை பிரதிபலிப்பனவாக இருக்க வேண்டும். அத்தகைய பிரச்சனைகளின்போது காவிய நாயகன் நடந்துகொள்ளும் முறை, வழி என்பன சாதாரண ஒரு மனிதனுக்கு படிப்பினையாக அமைந்து சிறக்க வேண்டும். இத்தகைய தன்மையால்தான் ஒரு காவியத்தால் மானுடம் பயன்பெற முடியுமே தவிர தெய்வீகத்தை மட்டுமே சிறப்பித்து விட்டு அமையும் காவியங்களால மனிதனுக்கு இக வியல் பிரயோசனம் இல்லை. மனிதனுல் அவற்றை பார்த்து வியக்க மட்டும் முடியுமே தவிர பின்பற்ற முடியாது. மேலும் அவை காவியங்களல்ல, புராணங்களே ஆகும்.

கம்பன் தன் காவிய நாயகனை அறிமுகஞ் செய்கையிலேயே, அவையடக்கம் கூறுகையில் "காசில் கொற்றத்து ராமன் கதை" என்கிருன்.

நான் தெய்வத்தை பாட வரவில்லை, தெய்வத்துக்கு கசு (குற்றம்) என்ற பொருளில்லை. நான் அதனைப்பாட வரவில்லை, குற்றமற்றவனுக வாழ முயன்ற ஒரு மனிதனின் சரிதத்தை மானுடத்துடன் உயர்ந்து நின்ற அவதார புருஷனை மட்டுமே பாட வருகின்றேன் என்று கூறிவிடுவதில் இருந்து தன் காப்பியம் சிறந்த மானுடம் ஒன்றைப் பாட வந்ததே என்பதைக் குறிப்பிட்டு விடுகிருன்.

- ரி. சிவகுமாரன் -

அவதாரத்திற்கு தான் தெய்வீகத்தின் அம்சம் என்பது காவியம் முழுக்க தெரியவராமலே இருக்கும். ஆனுல் அதனுடன் காவியம் முழுக்க ஒட்டி உறவாடுகின்ற, கூடப் பழகி வருகின்ற ஏனைய முக்கிய பாத்திரங்களால், அவதாரப்பாத்திரம் துன்புற்றுதுவள்கின்ற வேளையிலே, சிக்கலுக்கு உள்ளாகின்ற நேரத்திலே 'அது தெய்வீகம்' என உணர்த்தப்படுவது காவியப் போக்கிற்கும் சமூகத்திற்கும் உதவும் என்று காவியப் புலவனுல் கையாளப்படுகின்ற ஒரு உத்தியேயாகும்.

இந்த வகையிலே ராமனின் பல குண விசேடங்கள், சாதாரண ஒரு மானுடன் மகிழ்வுடன் பின்பற்றக் கூடியதாக காணப்படுவது நல்நிலையை அடையக்கூடிய எந்த ஒரு மானிடனுக்கும் ஊக்கம் தரக் கூடியதேயாகும்.

வாலி வதையைப் பொறுத்த வரையில் இன்னும் ராமனின செயல் ஐயுறப்பட்டு, பல இலக்கிய ஆய்வுகளுக்கு களமாவதில் ராமன்என்கிறசிறந்த மானுடத்திற்கு சிறப்பே தவிர குறைவில்லை. சிறந்த ஒரு மனைவியை இழந்த நிலையில் ஒரு மனிதன் தடுமாற்றத்துக்கு உள்ளாவதும் அதனுல் அவனது செயல்களில் அது தாக்கத்தை ஏற்படுத்துவதும் தவிர்க்க முடியாததேயாகும் வாலியை ஒரு நிலையில் மனிதன் என்றும் இன்னெரு நிலை

(12ம் பக்கம் பார்க்க)

### காலமும் பேச்சும்

பேச்சாளர் ஒருவர் அதிக நேரம் பேசிக் கொண்டேயிருந்தார். நேரமாகிக்கொண்டேயிருந்தது, அவர் பேச்சை நிறுத்திய பாடில்லை.

கூடியிருப்பவர்கள், அனைவரும் பொறுமையிழக்கும் கட்டம் வந்தது. சிலர் வேண்டுமென்றே இருமினர்கள்; தும்மினர்கள்.

பேச்சாளர் நிலைமையை புரிந்து கொண்டார்.

'நான் அதிக நேரம் பேசிவிட்டேன் போல் தெரிகிறது. என்னிடம் கடிகாரம் இல்லை. எதிர்த்தாற்போல் சுவரிலும் கடிகாரத்தை காணேம்' என்ருர் அவர்.

உடனே கூட்டத்தில் ஒருவர் எழுந்து இப்படி சத்தம் போட்டார். அது சரி உமக்குப் பின்னுல் கலண்டர் மாட்டியிருக்கிறதே. நீர் அதைக் கூடப் பார்க்கவில்லையே?

# ஈழத்துப் புதுக் கவிதை - புதிய பார்வை

**சார்ள்ஸ்**

யாப்பில் இயங்கிய கவிதை உரை நடை வடிவத்திற்குத் தாவியபோது புதிய வெளியீட்டுச் சிக்கல்களைத் சந்தித்தது.

யாப்புச் சிறையிலிருந்து வெளியேறிய கவிதை, உரை நடை வடிவத்தில் இயங்கும் போது புதிய உத்திமுறைகளை நாடும் தேவை கவிஞர்களுக்கு ஏற்பட்டது.

இதன் விளைவாகவே இன்றைய கவிதை தனக்கெனத் தனித்தன்மையான வெளியீட்டு உத்திகளைக் கவிஞனிடம் வேண்டி நிற்கின்றது. (புதுக் கவிதை] ஒரு புதிய பார்வை-பாலா)

வசன கவிதை (Prose Poem) கட்டற்ற கவிதை (Vorse-Libre) போன்ற வடிவங்களைக் கையாண்ட கவிஞர்கள் நவீன கவிதைகளைப் படைப்பதில் ஆர்வங் கொண்டனர், அதனூடாகவே எழுந்தது புதுக் கவிதை எனலாம்.

ஈழத்தில் புதுக்கவிதையின் தோற்றம் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பாக ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பதுகளிலேயே (1940) தோன்றியது. மரபுக் கவிதையின் தளர்ச்சியுறாத பிடிப்பினுல் ஈழத்தில் புதுக்கவிதையின் வளர்ச்சி மிக அமைதியாகவோ அல்லது ஆமை வேகத்திலேயோ நடந்தது என்று கூறலாம்.

ஈழத்தில் புதுக்கவிதை வளர்ச்சி அடைவதற்கு ஆரம்ப அடித்தளமாக அமைந்தது 'மறுமலர்ச்சிக் குழு' வினதாகும். மறுமலர்ச்சியினூடே புதுக்கவிதை முதன்முதலாக ஈழத்தில் வெளிப்படுத்தப்பட்டது.

புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி தமிழகத்தின் கவிஞர் புவியரசு எழுதிய புதுக்கவிதை வரிகளில் இருந்து:

''அரைத்த மாவையே
குழைத்து உருட்டி
பழமைக் கல்லின்
நடுவில் நிறுத்தி
யாப்பு உருளையால்
எண்சீர் அளவுக்கு
இழுத்துத் தேய்த்து
உலர்ந்த உவமை
மாவைத் தூவி
எடுத்துச் சிலேடை
எண்ணெயில் போட
'பஃப்' என
உப்பிச் சிரித்தது அது!

அதை ஆசையாய்
எடுத்து இலையில்
போடும் வேளையில்
ஒரு புதுக்காற்று...
'குப்'பென வீசிற்று ஓ!
குனிந்து பார்த்தேன்
உடைந்த அதற்குள்
ஒன்றுமே இல்லை!''

புதுக்காற்று எனக் கவிதையில் புதிய கவிதையையே கவிஞர் புவியரசு அறிமுகமாக்குகின்றார். புதிய காற்றின் முன்பாக பழமையின் மரபு மரணித்துப்போகின்றது எனவும் கூறுகின்றார் கவிஞர்.

ஈழத்தில் புதுக்கவிதைத் தோற்றம் பெறுவதற்குத் தமிழகத்தின் சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் முக்கிய பங்கினை வகித்தன எனலாம். மறுமலர்ச்சிக் குழுவினரின் எழுச்சி தோற்றம் பெறுவதற்கு தென்னிந்திய சஞ்சிகைகளே முக்கிய காரணம் ஆகும்.

புதிய கவிதைகளை வெளியிடுவதில் களம் அமைத்த ''மணிக்கொடி'' ''சூறுவளி'' போன்ற சஞ்சிகைகள் தமிழகத்தில் பெரும்பங்கு வகித்தன. இதனைத் தொடர்ந்து ''கலாமோகினி'', ''கிராம ஊழியன்'' போன்றனவும்புதிய கவிதைகளைத் தாங்கி வெளிவந்தன.

தமிழகத்தில் கிராம ஊழியன் வெளிவரத் தொடங்கிய காலகட்டத்திலேயே ஈழத்தில் மறுமலர்ச்சிக் குழுவினரும் உதயமாகினர். இச்சங்கம் வெளியிட்ட சஞ்சிகையின் பெயரும் ''மறுமலர்ச்சி'' ஆகும்.

இக்கால கட்டத்தில் 1940 களில் புதுக்கவிதை எழுதிய ஈழத்துக் கவிஞர்களின் படைப்புக்கள் முதலில் தென்னிந்தியப் பத்திரிகைகளிலேயே பிரசுரிக்கப்பட்டன. ஈழத்தில் அக்காலகட்டத்தில் சஞ்சிகைகள் வெளிவந்தபோதிலும் புதிய கவிதைகளைப் பிரசுரிப்பதில் தயக்கங் காட்டியதாக அறியப்படுகின்றது.

புதுக்கவிதை இயக்கத்தின் மூத்த கவிஞராகக் கருதப்படும் தமிழகக் கவிஞர் ந. பிச்சமூர்த்தி தன் கவிதைகளின் உருவம் பற்றிப் பேசும்போது:

''முதலில் வசன கவிதை
போலும்
பின்னர் மரபொலிகள்
கலந்தவை
போலும் கவிதைகள்
அமைந்திருப்பது
மறு கண்ணோட்டத்தில்
தெரிந்தது
புதுக் கவிதை முயற்சிக்கு
இவை
ஒவ்வாதென்றும் உறுத்
திற்று''

என்கின்றார் கவிஞர் ந. பிச்சமூர்த்தி. (பிச்சமூர்த்தி கவிதைகள் முன்னுரையிலிருந்து). புதுக் கவிதைகளை ஆரம்ப காலகட்டத்தில் எழுதும்போது அவை யாப்பிலக்கண வடிவத்துக்குள் அடங்கியிருப்பது போலக் கருதப்பட்டது. ஆனால் பின்னைய காலகட்டத்திலேயே புதுக்கவிதை யாப்பு மரபிலிருந்து முழுச் சுதந்திரமும் அடைந்தது. அதுவரை புதுக்கவிதை எழுதும் கவிஞர் தாங்கள் எழுதிய கவிதைகள் எவ்வகை சார்ந்தது என்பதில் ஐயங்கொண்டிருந்தனர்.

ஈழத்தில் புதுக் கவிதை முயற்சிகளுக்கு மறுமலர்ச்சிக் கழகம் களம் அமைத்தமை போன்று, 'பாரதி' சஞ்சிகையும் புதிய கவிதைகளை வெளியிட்டு இலக்கியப் பரப்பை அறிமுகப்படுத்துவதற்கு உசாத்துணையா இருந்தது. இதனைப்போன்று 'ஈழகேசரி'ப் பத்திரிகையும் புதுக் கவிதைகளைப் பிரசுரிப்பதில் முன்னின்றது.

தமிழ்க் கவிதை மரபும் மாற்றங்களை மதித்து வணங்கிச்சிம்மாசனமேற்றியது. மரபுதான். சிந்தனை ரீதியாகவும், வடிவ ரீதியாகவும் மாற்றங்கள் தொடர்ந்து நிகழ்ந்துவந்துள்ளன. சங்கக் கவிதையில் இருந்து பாரதிதாசன் வரை வெளிப்படும் சிந்தனை மரபைக் கவனித்ததாலேயே எத்தனை மாற்றங்களை அவதானிக்கலாம்.

மரபுக் கவிதைகளுக்குள்ளேயே எத்தனையோ பலமாற்றங்கள் ஏற்பட்டபோது அவை புதிய வடிவமாற்றத்தை ஏற்படுத்துவது காலவோட்டத்தின் நிகழ்வென்றே கருதலாம். இதுவே புதுக் கவிதையின் கருவாகவும் அமைந்து கொண்டுள்ளது.

புதுக் கவிதை ஈழத்தில் பல தலைமுறைகளைக் கடந்து தொடர்ந்தும் வெளிப்படுத்தப் பட்டுக்கொண்டே வருகின்றது. ஆயினும் தமிழகத்தைப் போல் ஈழத்தில் புதுக்கவிதை ஓர் இயக்கமாகச் செயற்பட்டது என்பதில் நிறைய வேறுபாடுகள் உண்டு. தமிழகத்தில் புதுக் கவிதை இயக்கம் பல தலைமுறைகளைக் கடந்தும் குழுக்களாகவோ மரபினராகவோ தொடர்ந்தும் இயங்கி வருகின்றது. வானம்பாடிக் குழுவினரைப் போன்று ஈழத்தில் புதுக் கவிதையின் இயக்கத்துக்கு எந்த ஒரு குழுவினரும் முன்னிற்கவில்லை.

ஈழத்தில் புதுக் கவிதையின்
(11-ம் பக்கம் பார்க்க)

## தும்மல்

தும்மலைச் சாதாரணமாக நினைக்க வேண்டாம். அதுவே சில சமயங்களில் பெரிய ஆபத்துகளையும் விபத்துக்களையும், ஏற்படுத்திவிடுகிறது. அமெரிக்காவில் காலமாசூ என்ற ஊரை சேர்ந்தவர் ஜான் ஆர்னல்டு. இவர் கார் ஓட்டிச்சென்றபோது பயங்கர தும்மல் ஒன்றைப் போட்டார். உடனே கார் கட்டுப்பாட்டை இழந்து, எதிரே வந்த இன்னொரு கார் மீது மோதியது. அவர் வாயிலிருந்த சிகரட் கீழே விழுந்ததையும், அது புகைந்து காரில் தீப்பற்றிக்கொண்டதையும் ஆர்னல்டு கவனிக்கவில்லை. மோதலால் காருக்கு ஏற்பட்ட சேதம் சிறிதளவே என்றாலும் சிகரட் மூட்டிய தீ அந்தக் காரையே எரித்து உருத்தெரியாமல் செய்துவிட்டது.

# வானொலி நாடகம்

(3)

**அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை**

இன்று பாடசாலையிலும் பல்கலைக்கழகத்திலும் நாடகம் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகின்றது. க. பொ. த சாதாரண தமிழ்மொழி பாடத்திட்டத்தில் நாடகமும் சேர்க்கப்பட்டுள்ளது. மாணவர்களைக் கொண்டு நாடகங்களை நடிப்பிக்கும்படி ஆசிரியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். பாடசாலை தமிழ்த் தினப்போட்டிகளில் நாடகப் போட்டியும் இடம்பெறுகின்றது. இவற்றையெல்லாம் எதைக்கொண்டு செய்வது? வெறும் கை முழம் போடுமா? ஆசிரியர்கள் தாங்களே நாடகங்களை எழுதி மாணவர்களைக்கொண்டு நடிப்பிக்கவேண்டி இருக்கிறது. அதனால்தான்போலும் தமிழ்த்தின நாடகப் போட்டிகளில் பெரும்பான்மையான பாடசாலைகள் பங்குபற்றுவதில்லை.

### பாடசாலையில் நாடகம்

நாடகப்பிரதி எழுதும் போட்டியிலும் மாணவர்கள் பங்குபற்ற வேண்டி இருக்கிறது. நாடக நூல்களோ இல்லை. பத்திரிகைகளும் நாடகங்களைப் பிரசுரிப்பதில்லை. நாடக அரங்கேற்றங்களும் அருமையாகவே இடம்பெறுகின்றன. அந்த அரங்கேற்றங்களுக்கான டிக்கற்றுகளின் விலைகளோ வெனின் யானை விலை குதிரை விலை, இலங்கை தொலைக்காட்சியும் தமிழ் நாடகங்களைக் கைவிட்டுவிட்டது. மாணவர்கள் ஒழுங்காகக் கேட்பது வானொலி நாடகங்களை மட்டும்தான்! நாடகங்களையே வாசிக்காத மாணவர்கள் எப்படி நாடகங்கள் எழுதுவார்கள்? பெரிய எழுத்தாளர்களே நாடகம் எழுதத் தயங்கும் பொழுது, அறிவும் அனுபவமும் குறைந்த மாணவர்களால் நாடகம் எழுத முடியுமா?

ஓ. எல். வகுப்பில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு நாடகத்தையும் வகுத்து வைத்த அறிஞர்கள் மாணவர்களையும் ஆசிரியர்களையும் அம்போ என்று கை விட்டு விடவில்லை. நாடகம் பற்றிய ஒரு கட்டுரையையும் ரத்தினச் சுருக்கமாக எழுதி ஆண்டு11'' தமிழ் பாடநூலில் சேர்த்துள்ளனர். நாடகம் சம்பந்தமான விடயங்களை கூறும நூல்கள் போதியளவு இல்லாத சூழ்நிலையில், நாடக ஆர்வலர்க்கு அந்தக் கட்டுரை ஒருவரப்பிரசாதமாக அமைந்துள்ளது. அதில் நாடகம் பற்றிய பொதுக் குறிப்புகள், நாடகத்தின் சிறப்புக்கூறுகள், நாடக வகைகள், ஓரங்க நாடகம், வானொலி நாடகம். நாடக விமர்சனம், போன்ற பல தலைப்புக்களில் நாடகம் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. பல அறிஞர்கள் ஒன்று கூடிக் கலந்தாலோசித்து எழுதிய அக்கட்டுரையை மாணவர்களும் ஆசிரியர்களும் மட்டுமன்றி நாடகத்துறையில் ஈடுபாடு கொண்டுள்ள அனைவரும் கட்டாயம் வாசிக்க வேண்டும்!

அவர்கள் செய்யக்கூடியது அவ்வளவுதான். இனி நல்ல நாடகங்களை எழுதிக்கொடுக்க வேண்டியது எழுத்தாளர்களது கடமை.

### நாடக நூல்கள்:

எங்கள் நாட்டில் மேடையேற்றப்படும் நாடகங்கள் அனேகமாக அச்சுவாகனம் ஏற்றப்படுவதில்லை. ஓரிரு அரங்கேற்றங்களுடன் அந்த நாடகப் பிரதிகள் கைவிடப்பட்டு விடுகின்றன. சில வெளியிடப்பட்டுள்ளன. வெற்றிகரமாக பல மேடைகளைக்கண்ட ஒரு சில நாடகங்கள் கூட ஏனோ தெரியவில்லை நூலுருவம் பெறவில்லை. எனது வானொலி நாடகநூலை வெளியிட்டேன். இலங்கை வானொலி தமிழ்ச் சேவை தனி நாடகங்களின் முதலாவது தொகுப்பு நூலும் இதுவாகும்.

மேடை நாடகங்களையே வெளியிடத் தயங்குகிறார்கள். வானொலியினால் பலமுறை ஒலிபரப்பப்பட்டு வீட்டுக்கு வீடு கேட்கப்பட்ட நாடகங்களை நூலுருவிற் கொண்டு வந்தால், மக்கள் அவற்றைக்காசு கொடுத்து வாங்குவார்களா? வாங்கினாலும் வாசிப்பார்களா? வாசித்தாலும் நடிப்பார்களா? என்ற ஐயவினாக்கள் என் நெஞ்சில் எழாமலில்லை. இருந்தாலும் துணிந்து மேடை நாடகங்களில் 'பொலிடோலே கதி' 'பணமோ பணம்' என்ற இரண்டு நாடகங்களை அச்சிட்டு வெளியிட்டேன். அந்த நாடகப் பிரதிகள் (எவரிடமும் திணிக்கப்படாமலே) கடைகளில் விற்று முடிந்துவிட்டன.

ஆங்கில மொழியில் ரீ. வி. நாடகங்களே அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கின்றன. தமிழ் மொழியில் வானொலி நாடகங்கள்கூட வெளிபிடப்படாதிருப்பது வியப்பாக உள்ளது. இதுவரை எனது 150 நாடகங்கள் இலங்கை வானொலியினால் ஒலிபரப்பப்பட்டிருக்கின்றன. வானொலி நாடகங்கள் எத்துணைச்சிறந்தவையாயினும் வெறும் காற்றோடு கலப்பவை தானே? ஒரு புது முயற்சியாக எனது வானொலி நாடகங்கள் சிலவற்றைத்தொகுத்து வெளியிடும் எண்ணம் எனக்குப் பல நாட்களாக இருந்து வந்தது. பாடசாலைப் பிள்ளைகளும் நடிக்கக்கூடிய வகையில், காதல் கல்யாணம் கலக்காத நாடகங்களாகத் தெரிவு செய்து 'கெட்டிக்காரர்கள்' என்ற வெளியிட்டேன். எனது எதிர்பார்ப்பு வீண்போகவில்லை. மக்கள் அவற்றைக் காசு கொடுத்து வாங்குகிறார்கள். இரவல் வாங்குபவர்கள் கூட, சிறியவர் முதல் முதியோர் வரை எல்லா நாடகங்களையும் வாசிக்கிறார்கள். அந்த நாடகங்கள் மேடைகளிலும் நடிக்கப்படுகின்றன. எனது முதலாவது வானொலி நாடக நூலுக்குக் கிடைத்த வரவேற்பு, என்னை எனது இரண்டாவது நாடக நூலான 'முதலாம் பிள்ளை'யை வெளியிட வைத்தது. இலங்கையில் இன்னும் பல வானொலி நாடகாசிரியர்கள் இருக்கிறார்கள். இனி அவர்களும் துணிந்து, தங்கள் நாடகங்களை, அச்சுவாகனம் ஏற்றித் தமிழ் மக்களது 'நாடகப் பசி'யைத் தீர்க்க உதவுவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

### நல்ல வாய்ப்பு

வடக்கு-கிழக்கு மாகாண சபை ஈழத்து எழுத்தாளர்களின் தரமான நூல்களைத்
(12-ம் பக்கம் பார்க்க)

## இரு சஞ்சிகைகளில் ஒரே கதை

ஒரே கதையை கட்டுரையைஅல்லது கவிதையை எழுதி ஒரேநேரத்தில்இரண்டுமுன்றுபத்திரிகைகளுக்கு அனுப்பும் பழக்கம் சில எழுத்தாளர்களிடம் இருந்து வருகிறது.

1960ம் ஆண்டு வருணன் என்ற எழுத்தாளர், ஒரே கதையை குமுத்ததிற்கும் கல்கண்டிற்கும் அனுப்பிவிட்டார். இதனால் இரண்டு சஞ்சிகைகளிலும், இந்தக் கதை ஒரே சமயத்தில் பிரசுரமாகி விட்டது. கல்கண்டில் பாசக்குரல், என்ற கதையும் குமுதத்தில் 'அதற்குள் ஏன் சந்தித்தீர்கள்?' என்ற கதையும் இதே வருணன் எழுதிய ஒரே கதைதான்.

இந்த மாதிரி செய்வது எழுத்தாளர்களுக்கு இழுக்காகும் என்று அப்போது நூற்றுகணக்கான வாசகர்கள் கல்கண்டில் கடிதங்கள் மூலம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

ஒரு கதையை அல்லது கவிதைா எழுதி ஒரு பத்திரிகைகளுக்கு அனுப்பி அதுபிரசுரமாகவிட்டால், அதனை திரும்ப பெறற பின்னரே வேறு பத்திரிகைக்கு அக்கதையை அனுப்பி வைப்பது முறையானதாகும். ஒன்பது பத்திரிகைகளுக்கு ஒரே கதையை ஒரே சமயத்தில் அனுப்புவதை எழுத்தாளர்கள் தவிர்த்து கொள்வது நல்லது என்றும் ஆலோசனை வழங்கப்பட்டது.

— தசமுகன்

## சிறுகதை

# துடுப்பு இழந்த ஓடங்கள்!



ராஜேஸ் அக்கா சொன்ன குறிப்பின்படி. நான் அவவின் வீட்டைப் பிடிப்ப தொன்றும் எனக்குக் கஷ்ட மானத்தாகத் தெரியவில்லை. புருஷன் சயிக்கிள் கடைவைத் திருந்தவரென்றும், அதற்கு அடையாளமாக அங்கு கட்டித்தொங்க விடப்பட்ட செல்வம 'சயிக்கிள் வேக்ஸ்' என்ற விளம்பரப்பலகை ஒன்றே போதும், தன் வீட்டை இனங்காண என்றது உண்மை தான்

ஒரே நேருக்கு நாட்டப்பட்ட தென்னைகளும் ஒழுங்குபடுத்து வாரின்றிக் கிடந்த தென்னம் மட்டைகள், பாளைகள் குப்பைகள்...இந்தவீட்டில் யாரும் வசிப்பதில்லையோ என்று சந்தேகிக்க, நினைக்கத்தோன்றும். அமைதியும், காணியின் பின் பாகத்தில் அமைந்த வீடும், முன்புறம் சயிக்கிள் கடை இருந்ததற்கான ரயர், ரியூப் துண்டுகளும்... அந்தத் தெருவின் அமைதிக்கேற்றது போல......

வீட்டுக் கேற்றடியில்நின்று, நீண்ட நேர முயற்சியன் பின் ''யார் தம்பி, யாரைத் தேடுறய்?'' என்ற குரல் என்னைக் குளிர்வித்தது.

ஆச்சி, இது ராஜேஸ் அக்கா வீடுதானே?'' என்ற கேள்வியின் மூலம், எனக்கு முன் அறிமுகமுள்ள நன்கு தெரிந்த என்ற விடையைக் கிழவிக்கு கொடுத்தேன்.

''ஓம் தம்பி, நான் ராஜேசின் அம்மா தானே வா, உள்ளுக்கு வா,'' என்று கிழவி கூப்பிடவும், நான் ''ஆச்சி செல்வண்ணன் நிற்கிறரோ?'' என்று முன்ஏற்பாடாகக் கேட்டேன். ''அவனில்லை நீ வா தம்பி'' என் முன் நடந்து சென்ற கிழவி கதிரையைத் துடைத்து, நான் இருக்க வசதி செய்தது. நான் ராஜேஸ் அக்கா என்று தொடங்கியதும் செல்வண்ணன் இல்லையோ என்றதும் கிழவிக்கும் புரிந்து விட்டது.

''தம்பி நீயும் வெளிநாட்டில இருந்தனியோ? என்ரை மகளும் வெளிநாடுதானே''

''ஓம் ஆச்சி நாங்கள் ஒரு நாட்டிலதான் வேலை செய்தனுங்கள். நான் இப்ப லீவில வந்தனுன். உங்கடை மகள் கொஞ்சக் காசும் மூத்த மகளுக்கு சேலையும் மகனுக்கு சில உடுப்புகளும் தந்துவிட்டவ. இந்தாங்கோ''

நான் கிழவியிடம் கொடுக்க முற்படும்போது கிழவி ஒப்பாரி வைத்து அழ தொடங்கி விட்டது.

''தம்பி எந்தக் காலத்தில இப்பிடி நடந்தது. இப்ப எல்லாம்கலியுகம் தானே. பெண்ணைப் பிறந்தவள் வீட்டிலிருந்துசமைச்சுப் போடுறதுக்கு இப்ப கண்டறியாதஒரு வெளிநாடு கண்டிட்டினம், புருஷன் மாரும் வீட்டில காலாட்டிக் கொண்டு' வேளா வேளைக்குச் சாப்பிட்டுக் கொண்டிருக்க இவை பறக்கினம். அவளை எவ்வளவு சொல்லி தடுத்தன். அவள் ஆ! என்ரை சொல்லைத் கேட்கேல்ல இன்றும் கேட்கேல்ல''

கிழவி தன்னுடைய காலத்தோடு ஒப்பிட்டுப்பார்க்கிறது. புருஷன் நாலு தொழிலும் செய்து தேவையானதைக் கொண்டு வந்து போட ஆக்கிக் கொடுத்த காலம் அது.

தன் அழுகையினூடு கிழவி ''அதையேன் தம்பி கேட்கிருய். இவள் வெளிநாடு போனதோடு,அவன் சயிக்கிள் கடையும் விட்டிட்டு தன் இஷ்டம். காலமை நாலைஞ்சு பேர் வந்திடுவினம். கடதாசி கூட்டம் போடுவினம். பிறகு கடதாசிகளைச் சேர்த்துப் போட்டு,தாங்கள் கலைவினம். வாடிக்கைக்கள்ளு. பிறகு சொல்லவேணுமே. அவையின்ரை கூத்து''

''பிள்ளையள் எங்கே போய் விட்டுதுகள் பிள்ளைகள் கூட கடிதம் போடுவதில்லை என்று கவலைப்படுவா''

''அவள் தாய் போனதோட அதுகளையும் அடக்கேலாது தம்பி. ஆயிரமாயிருந்தாலும் தாயிருக்குமாட்போல வருமே அவன் தன்ரை பாடு. அது பொடியள் தன்ரை பாடு.நான் வயசான காலத்தில அதுகளைத் திருத்துவனே. அவள் தாயின்ரை கடிதம் கண்டவுடனே, தகப்பன் தானும் எழுதி,பிள்ளையளையும்நாலுவரி எழுதச் சொல்லியெல்லோ செய்ய வேணும்.''

''தம்பி, நான் தான் பக்கத்து வீட்டுப் பிள்ளையைக் கொண்டு எழுதுகிறதும், வாசிக்கிறதும். காசனுப்பினுலும் கிடைச்சது என்ருெரு வார்த்தை எழுத மாட்டான். அவளனுப்புற காசில அவன் குடிச்சுக் கும்மாளமடிக்கிறதெங்கே, கடிதமெழுதிறதெங்கே! அவள் என்ரை வயித்தில பிறந்தண்டிலிருந்து கஷ்டம் தான். பாவி என்ன பலனில பிறந்தாளோ!''

கிழவி தன் மகளை நினைததழுகிறது.

ராஜேசக்கா வங்கிக்குக் காசு அனுப்ப வந்ததும் அந்த நேரங்களில் கதைத்த போது, பக்கத்து ஊரென்று அறிந்ததும் கடல் கடந்து அந்நிய நாடுகளில் வாழும் ஒவ்வொருவருக்கும் ஏற்படும் இயல்பான அன்பும் ஆதரவும் என்னையும் ராஜேசக்காவையும் இணைத்தது. தனக்கும் தன்போன்ற வீட்டு வேலைக்கெனவந்தவர்களுக்கும் பல நேரங்களில் ஏற்படும் கஷ்டங்களை கேட்கும் போதெல்லாம் இரக்கமும், கருணையும் ஏற்பட்டு, அதுவே நல்ல சகோதரஞக பழகும் வாய்ப்பும் எனக்கேற்பட்டது.

''தம்பிபார்சலைத்தா. அவன் வந்தானென்ருல் எல்லாம் பறிமுதல் தான். உன்னை நான் நம்புறன். ஆனுல் என்ரை மருமகனென்ருலும் அவனை நம்பமாட்டேன்''பார்சலுடன் உள்ளே போய் காசையும் சரி பார்த்து, பத்திரப்படுத்தி விட்டு வந்தபோது ராஜேசக்காவின் கடிதத்தைக் கொடுத்தேன்.

''தம்பி நீயே வாசித்துக் காட்டு.'' [redacted]

அன்பின் அம்மாவுக்கு,

நான் நலம். உங்கள் சுகம் அறிய ஆவல்.

பிள்ளைகளைக் கவனமாகப் பார். அவர் குடித்து விட்டு வந்து ஏதாவது நீதியீனமாக நடந்தால் பொறுத்துக் கொள்ளம்மா. நான் சந்தோசமாய் இருக்கிறேன்''

நான் கடிதம் வாசித்து முடிக்க முன்னர் ''தம்பி நல்லாயிருக்கிருளே என்ரை பிள்ளை?'' என்று கிழவி கடிதத்திற்கு சாட்சியாக என்னையும் கேட்டது.

''ஓம் ஆச்சிநல்லா இருக்கிரு பிள்ளையளை நினைச்சாத்தான் கவலை! அதுவும் இன்னும் எத்தனை நாளைக்கு''

பாவம் கிழவியாவது கொஞ்சம் நிம்மதியாக இருக்கட்டும். எந்தத் தாய் தன் பிள்ளையை அதுவும் பொம்பிளைப் பிள்ளையை வெளிநாட்டுக்கு கண்காணுத தேசத்துக்கு அனுப்புவாள்.

கிழவி ஓரளவு திருப்தி, நிம்மதியோடு ''நில் தம்பி தேத்தண்ணி போட்டுக் கொண்டு வாறன்'' என்று உள்ளே போகிறது.

நான் சுற்றும் முற்றும் பார்க்கிறேன். எவ்வளவு பெரிய காணி. அயல் வீடுகளெல்லாம் சோலையாகி, இந்த வீடு மட்டும் காடு. எட இந்தக் காணியை சுரியாய்ப் பயன்படுத்திஞலேஒருகுடும்பம் எப்படி வாழலாம் புருசன் இங்கே, பெண்சாதி அங்கே தாயொரு பக்கம், பிள்ளையள் ஒரு பக்கமென்று, சீ...என்ன வாழ்க்கையிது இந்தக்காணியையும், அந்த மனைவியையும் வைத்துச் சீவிக்கத் தெரியாமல் குடிச்சு அழிக்கிறவன் பொறுப்பில்லாதவன் தான். பாவம் ராஜேஷ் அக்கா குடும்பம் 'துடுப்பு இழந்த ஓடங்கள்' போலாகிவிட்டது.

''இந்தா தம்பி குடி! தம்பி அவள் இலங்கையிருந்தாலும் இவன் அடிச்சுக் கொல்லுவான். உழைக்கிறதையும் குடிச்சிட்டு, சாப்பாட்டு நேரத்திற்கு வந்திடுவான். அவளும் நான் குடுத்த நகைகளையெல்லாம் வித்துத் திண்டதும், பிள்ளைப் பெத்துக்கும், வருத்தம் கிருத்தமென்று முடிச்சதும், இவனும் இடைக்கிடை கெஞ்சி, மன்ருடி வாங்கிக் குடிச்சதும், அப்பிடியும் காசு குடுக்காத நேரத்தில வாங்கிக் குடிக்க, அந்தக்காசு குடுத்ததுமாக எல்லாம் போச்சு பிள்ளை காதில, கழுத்தில ஒண்டுமில்லாமல் கடைசியில வெளியில போய் இப்பவாவது கொஞ்சம் ஆறுதல்,

''ஆச்சி நான் போகவேணும் திரும்பப் போகுமுன் ஒருதரம் வாறன் ஏதாவது தரவிரும்பினுல் தாங்கோ.''

கிழவி தன் ஆற்ருமையால் ஏதோ தொடர்ந்தும் பேசுகிறது. நான் விடைபெற்று வந்துவிட்டேன். இங்கே தாய் அங்கே மகள். ஆம்பிளை சீராயிருந்தால் ஏன் இந்த அவலம். தன் மகள் சந்தோசமாக இருக்கிருள் என்ற நிம்மதியோடு இனி இந்தத் தாய் இருப்பாள். ஆனுல் நான் தான்......... உண்மைகளை தாய்க்கு மறைச்சிட்டன் ஆனுல் அவை என்னை விட்டு நீங்கா......

தான் வேலை செய்கிற வீட்டுப் பிள்ளைகளுக்கு குளிப்பாட்டி, உணவூட்டி, உடை உடுத்தி, உறங்க வைக்கும் நேரமெல்லாம் தன் பிள்ளைகள் எப்படியோ, எப்படியோ என்று ஏங்கித் தவிக்கும் மனதுடன் உறங்காத, உண்ணுத பொழுதுகள் எத்தனை என்று கூறும்போதும், தலையிடியோ, காய்ச்சலோ வந்தாலும் அம்மா என்று தன்தாயிடம் தான் ஆதரவு தேடுவதும், தன் பிள்ளைகள் தன்மடியில் கிடந்து உறங்குவதும் நினைக்கும்போது வேதனையாய் இருப்பதைக்கூறும் போதும், பாவம் ராஜேஸ் அக்கா என்றிருக்கும்.

இப்படி எத்தனை பெண்கள் உறங்காத கண்களோடும், நிம்மதியற்ற நினைவுகளுடனும், பெருமூச்சோடு இருக்குங்களோ.........

எசமானிக்கு புருஷனேடை தகராறென்ருலும் தன்னில தான் அந்த ஆத்திரத்தைத் தீர்ப்பாளென்றும், அப்படி அவள் கொடுத்த தண்டனைகளின் சின்னங்களை உடல் முழுக்கத் தாங்கிக்கொண்டும், நடைப்பிணமாய், தூண்டி விடப்பட்ட பொம்மையாய் ராஜேசக்கா படும் கஷ்டம் யாருக்குப் புரியும்.

''நான்தான் கட்டினவனேட இவ்வளவு காலமும் அடி, உதை பட்டு அல்லோல கல்லோலமாக வாழ்ந்தன். ஆனுல் சில பெண்கள் எவ்வளவு சொகுசாக இருந்து வந்து இப்ப என்ன பாடுபடுதுகள்.''

அப்பப்ப என்னைச்சந்திக்கும் போதெல்லாம், ராஜேசக்கா சொன்ன விசயங்கள், என்னை எவ்வளவு கவலைப்படச் செய்தன. ஆனுல் ஊரில் புருஷன் போக்கை நினைக்க, வெந்த புண்ணில் வேல் பாயுது. மானங்கெட்டவங்கள், கலியாணமும், பிள்ளைகளும்... தாங்கள் ஆம்பிளையெண்ட நினைப்பு வேறு.

ஒருத்தியைக் கண்கலங்காமல் பார்க்க வக்கில்லாதவங்கள், பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கத் தெரியாதவங்கள், ஏன்தான் கலியாணம் கட்டுருங்களோ?

மிருகங்கள், பறவைகள்

(11-ம் பக்கம் பார்க்க)

**ந. பார்த்திபன்**

## காலக் கடல்

காலக் கடலலையே—என்
கருத்தில் அடிப்பதென்னே
ஓலக் கடலொலிபோல்—நலம்
ஓதும் ஒலியெங்கே.

விரிந்தே சுருங்கிடுவாய்—நீ
விண்ணென வந்திடுவாய்
சரிந்தே உயர்ந்திடுவாய்—நீ
சங்கரன் என்றிடுவாய்

போகமாம் வெள்ளத்தில்—நான்
போர்ந்த விணவலையைத்
தாகமாம் என்கையால்—மிகத்
தாவிட வீசிடுவேன்

உயிரெறும் மீன்எல்லாம்—நின்
உருள்நீர் இரியுமன்றே
அயில்போற் சுழற்பரப்பில்—அவை
ஆடிப் பாயுமன்றே

அன்பருள் முத்தெல்லாம்—நீ
அள்ளிச் சொரிந்தாலும்
இன்பமாய் எடுப்பதுண்டோ—எம்
இதயம் நிலைப்பதுண்டோ

காதலர் கடியென்பார்—உனக்
காதகர் கதியென்பார்
பாதகர் பாழ்என்பார்—உன்னைப்
பகருஞ் சொல்லென்பேன்

உனக்கென்ன விலையுண்டோ—சீர்
உனக்கே உரித்தேகாண்
தனக்கொன்று மில்லாதான்—மெய்த்
தவசிபோல் தங்கிடுவாய்.

:-தொல்புரக்கிழார்

# ★ இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார்


பஞ்சமுக விநாயகனைத்
தொழுதிட வந்திடுவீர்

**லிங்கம் ஸ்ரோர்ஸ்**

கே. கே. எஸ். வீதி,
இணுவில்.




சித்திரத்தின் தேர் மீது
பவனி வரும் விநாயகனைக்
காண வந்திடுவீர்!

★

தரமான வீடியோ
படப்பிடிப்பாளர்கள்

**எக்ஸ்போ**

வீடியோ கொம்பிளெக்ஸ்,
இல. 7, காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில்.

## இணுவில் பிள்ளையார் ஆ

ஆலயங்கள் மிகுந்து காணப்படும் இணுவில் பதியிலே இற்றைக்கு 250 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தை ஆட்சிசெய்த ஆரியச் சக்கரவர்த்திகளுள் 11ம் தலைமுறையைச் சேர்ந்த பரராசசேகரமன்னனால் ஸ்தாபிக்கப் பட்டதனாலேயே இச்கோயில் பரராசசேகரப் பிள்ளையார் கோவில் எனப் பெயர் பெற்றது.

ஈழத்தில் உ
பற்றை
போர்த்துக்
லயம் இடிக்க
பின்னர் அர
பராமரிக்கப்
என்பதால்
வாழ்ந்த அ
மான்கள்,
கள் யாவரும்
யம் அமைத்
பாதுகாத்த


கொழுக்கட்டைப் பிரியன் அவன்
கொம்பினெழுத்தாணிகொண்டு
பாரதம் எழுதித் தந்தவனின்
தேர்த்திருவிழா காண வாரீரோ!

**முப்பெரும்
இலக்கிய மன்றம்**
இணுவில்



**அருள் ரியூஷன் சென்ரர்**
இணுவில்



**ஸ்ரீ பரராசசேகரப்
பிள்ளையார்
தண்ணீர்ப் பந்தல்**
இணுவில்



அஞ்சேல் அஞ்சேலென்று
அபயம் அளிப்பவனே! உம்
திருவடி நிழலில் நாம் சரணம்
அப்பனே!

★

**மல்ரி ஒயில்
இன்டஸ்றீஸ்**
லிமிட்டெட்,
கே. கே. எஸ். வீதி,
இணுவில்.



சித்திரத் தேரில் பவனி வரும்
விநாயகனே உம்
மகிமைகளை நாமுணர
அருள்புரிவாய்.

**சண்யோ
கோப்பி அன் கூ**
இல. 16 B, நவீன ச
சுன்னாகம்



வண்ண மருப்பொசித்து
வாரணனும் பூரணனும்
நண்ணும் தேரேறி
நகர்வலம் வருகின்றான்
பண்ணும் பக்தியுடன்
பாதம் தொழுதிடவே
திண்ணமாங் துதிக்கையன்
திருவருளைப் புரிந்திடுவான்.

**சி. சின்னத்துரை அன் பிறதர்,**
39, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.



தேரேறிப் பவனிவரும்
துதிக்கையன் அருள்பெறவே
ஊரேத்தும் இணுவையிலே
உளம் கனிந்தே வாரீரோ
பாரேத்தும் பரராஜ
சேகரனும் கணபதியும்
சீரேத்தும் அருள் எல்லாம்
சிறப்புறவே தந்திடுவான்.

**அண்ணா தொழிற்சா**
இணுவில்.

# கோவில் தேர்த்திருவிழா சிறப்பு மலர் ★



## ரராசசேகரப் லய வரலாறு

கோவில் ுகையிட்ட ல் இவ்வா ...தென்றும் பரையினுல் கோவில் ணு வி லில் கள், கல்வி ன் குடிமக் து மடால கோவிலைப் றும் கோவி

லின் வாயில் பக்கத்தில் மடம் அமைந்திருந்தமையினுல் ''மடத்து வாசப்பிள்ளையார் கோவில்'' என்று அவ்வூர் மக்களினுல் அழைக்கப்பட்டுவந்ததென்றும் கர்ணபரம்பரையாகக் கூறப்பட்டு வருகிறது.

இத்தகைய அரசபரம்பரையிலான இவ்வாலயம், ஏறக்குறைய முப்பது வருடங்களின் முன்னர் கற்கோவிலாக்கப் பட்டது. காலத்துக்குக் காலம் ருத்தாரணம் செய்யப்பட்டு வந்த இவ்வாலயத்தில் 1972ம் ஆண்டும் இராஜகோபுரம் அமைக்கப்பட்டும் கும்பாபிஷேகங்கள் வெகு விமரிசையாக நடைபெற்றது.

பரராசசேகர மன்னன் அமைத்தஇக்கோவிலை மேலும்

சிவநெறிப்பாவர்,
இளைப்பாறிய அதிபர்
ஸ்ரீ. வை. அ.
கதிர்காமநாதன்

ாார்

5

அழகுபடுத்த விளைந்த இணுவைமக்கள் காலத்துக்குக் காலம் இக்கோவிலைப் புதுப்பித்து இராஜகோபுர கும்பாபிஷேகம் முடிந்த 12 வருடங்களின் பின் 1984ம் ஆண்டு பரராசசேகரக் கணபதிக்கு புதுப்பொலிவோடு கட்டிடங்களைப் புதுப்பித்துக்கட்டி மகாகும்பாபிஷேகம் செய்தனர்.

இவ்வாலயத்தின் மூலமூர்த்தியாக கோவில் கொண்டெழுந்தருளி இருக்கும்விநாயகப் பெருமானது திருவுருவம் தமிழகத்துச் சிற்ப விற்பன்னர்களால் அமைக்கப்பட்டு இங்கு கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அத்தி முகத்தழகுடன் ஐந்துமுகம் பூர்த்திட்ட விநாயகப் பெருமானுக்கு 1966ம் ஆண்டு புதிய சித்திரத்தேர் ஒன்று செய்யப்பட்டது. இன்று ஞாயிற்றுக்கிழமை இருபத்தி நாலாவது வருடமாக பஞ்ச

0,

(12ம் பக்கம் பார்க்க)

## தேரேறிப் பவனிவரும் தெய்வீகம் காணுதியோ!

சீரேறு நல்லிணுவைச் சிற்பரனும் விநாயகனும்
காரேறு வண்ணமுறு கற்பகத்தின் அருள்பூப்ப
தாரேறு வாகுவடம் தண்ணெழில் சேர் சித்திரத்தின்
தேரேறிப் பவனிவரும் தெய்வீகம் காணுதியோ.

சித்திரத்தின் தேர்மீது சிற்பரனும் விநாயகனும்
அத்திமுகத் தழகுடனே ஐந்துமுகம் பூர்த்திடவே
பக்தியுடன் தொழுவோர்க்கு பாலித்திடுவான் அருள்
இத்தலமாம் இணுவையிலே இறைஞ்சிட வாரீரோ.

செழுமன்னன் பரராஜசேகரனும் துதித்திட்ட
கொழுக்கட்டைப்பிரியன் அவன் கொம்பில்னெழுத்
தாணிகொண்டு
எழும்பாரதம் எழுதி எமக்கெல்லாம் தந்தவனின்
தொழுந் தேர்த்திருவிழாவைத் தோர்த்தரிக்க வாரீரோ.

ஊர்கூடித் தேர்இழுத்தே உமைபாலன் பஞ்சமுகன்
பார்போற்ற வருகையிலே பக்திசெய்துபதம் பாட
சீர்மேவு பரராஜசேகர் எனும் விநாயகனும்
கார்வண்ணக் கணபதியை கண்டுகொளவாரீரோ:

''கவிமாமணி'' பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர்.

பரராசசேகர கணபதியை
சித்திரத்தேரினில் இருத்தி
வடம் பிடித்திழுத்திட
வாரீரோ!

V

"டைமன் ரேடர்ஸ்"
சுப்பிரமணியம் வீதி
சுன்னுகம்

சித்திரத் தேரேறிப் பவனி வரும்
பரராஜசேகரக் கணபதியின்
அழகுக் காட்சியைக்
கண்டுகளிப்போம்!

V

சியாரெக்ஸ் லிமிட்டெட்
கே. கே. எஸ். வீதி
கோண்டாவில் மேற்கு
கோண்டாவில்

## தேரேறும் இணுவையம்பதி

### பரராஜ சேகரனே போற்றி, போற்றி

பாரிணுவை வாழ்கின்ற பலவடியார்
பரந்தேத்தும்
சீரிணுவை சிறக்க வைத்து சிக்கலெல்லாம்
களைந்தெடுத்து
வேலினிலே வல்வினைகள்
வெட்டுவித்த வல்லோனே
காரிருளை நெஞ்சினிலே கரைந்தெடுத்த
பேரொளியே – கண்
நீரினிலே நீந்துகின்ற நின்னடியார் நலம்நாடி
தேரினிலே மேவும் பரரயஜசேகரனே
போற்றி போற்றி.

இணுவையூர் இரா. அருட்செல்வி
(ஆசிரியர்)

சித்திரத் தேரேறி வரும் விநாயகனின்
திருவடி தொழுவோம்!

பவளராஜா வீடியோ மூவி
ஓடியோ வீடியோ கிளப்,
(வீடியோ, கமெரா, றைகோடிங் அன்
அன்ரனு பிற்றிங்)
பிள்ளையார் கோவிலடி, இணுவில்

கூடுமெய்த் தொண்டர் சூழாத்துடன் கூட்டி
அஞ்சக் சரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலை அறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே:

★

மில்க்வைற் மேலுறைகள் 25 அனுப்பி விநாயகர் ஸ்ரிக்கர் ஒன்றும், பஞ்சபுராணம் திரட்டு நூல் பிரதியொன்றும் பெற்றுப் பயனடைக.

மில்க்வைற் தொழிலகம்
த. பெ. இல. 77,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தென்னிணு வைப்பதியமர்ந்து —
தெய்வீக அருள் சுரந்து
மன்னுயிர்க் கெலாம் மங்கல —
வாழ்வளித்து,
பன்னுபுகழ்ப் பரராசசேகரனூர் —
பாரதனில்
சென்னி மிகப்பணிந்து சேவித்த —
கணபதியே!
முன்னைவினை களைந்து முத்திநெறி —
யருளி
இன்னருளை எம்மவர்க்கு ஈந்தருள்வாய் இறைவா;

V

சாந்தி
ரெக்ஸ்ரைல்
157, நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

# மங்கையர் நேசரி

## பெண்ணாகப் பிறந்தாலே!

தாயான பெண்களுக்குத் துன்பம் மிகுதி. கன்னிப் பெண்கள் தாம் கவலையற்றிருக்கிறார்கள். தாயாகிவிட்ட பெண் தன் குழந்தைகளைப் பற்றியும் தன் கணவனைப் பற்றியும் தன் தாய் தந்தையரைப் பற்றியும் தன் மாமனார் மாமியார் பற்றியும் அடிக்கடி கவலை மிகக் கொள்கிறாள்.

பொது நோக்கில் கண்டால் ஆண்களுக்குப் பணக் கவலை. பெண்களுக்கு மனக் கவலை. ஒருவன் பணத்திற்குக் கவலை கொண்டால் அது நியாயம். ஒருத்தி மனக்கவலை கொள்வது நியாயமல்ல.

பொதுவில் பெண் மெல்லிய உடலையும் மெல்லிய இடுப்பையும் பெற்றிருப்பதைப் போலவே மெல்லிய மனத்தையும் கொண்டிருக்கிறாள். அதனால் சிறு நிகழ்ச்சிக்குக்கூடப் பெண் கவலை கொள்கிறாள்!

பிள்ளைப் பேற்றின் காரணமாகப் பலமுறைகளில் பெண் இரத்தத்தை இழக்கிறாள். கவலையால், தேவை இல்லாத துன்பத்தால் அவள் இன்னும் இரத்தத்தை இழக்கிறாள்.

பெண்களில் பெரும் பாலோருக்கு அனீமியா என்ற நோய் இருப்பதற்கு இதுதான் காரணம்!

எனவே, பெண் எதற்கெடுத்தாலும் கவலைப்படும் பண்பினளாக இருப்பதில் பொருள் இல்லை. புண்வந்தால் துன்பம்




கொள்வதும் பொன் வந்தால் பூரிப்புக் கொள்வதும் இன்றையப் பெண்ணின் இயல்பு. இது அறியாமை!

எது வந்தாலும் ஏற்று மகிழும் பண்பே. பகுத்தறிவுக்குரிய பண்பு. எழுந்ததிலிருந்து தூங்கும்வரையில் ஒரே பணியையே தினமும் செய்துவரும் பெண்ணின் மனம் தினமும் மகிழ்ச்சிகொண்டதாக இருக்க வேண்டாமோ!

### இப்பவே வெளிக்கிடு!

ஒரு கணவன் கந்தோரிலிருந்து, வீட்டிலிருந்த மனைவிக்கு சினிமாவுக்கு போக இரண்டு டிக்கட் கிடைத்துவிட்டது என்றான்.

மனைவி ஆகா.. "அப்ப நான் உடனே வெளிக்கிட தயாராகிறேன்" என்றாள்.

அதற்குக் கணவன் "ரொம்ப நல்லது. இப்பவே வெளிக்கிட தயாராகினல்தான், சினிமா தொடங்க முன்போய் சேரலாம். டிக்கட் நாளை இரவுக் காட்சிக்குத்தான் என்றான்.

### விதவைகள்!

ஆஸ்திரேலியாவில் வசிக்கும் திவி என்ற ஆதிவாசிகள் கணவன் இறந்தால் இறுதிச் சடங்கன்றே மறுமணம் செய்து கொள்ளவேண்டும்.

அதுமட்டுமல்ல பெண் குழந்தை பிறந்ததுமே இவர்கள் திருமணம் நிச்சயார்த்தம் செய்யும் பழக்கம் இன்றும் உண்டு.

### கன்னிப் பெண்கள்

சுவிர்சலாந்தில் நித்வால்டன் நகரைச் சேர்ந்த கன்னிப் பெண்கள் தங்கள் தலைக்கொண்டையில் கியுபிட் (Cupid) அம்பை போன்ற பின்களை அணிகிறார்கள். இப்படி அணிந்திருப்பவளை திருமணம் ஆகாதவள் என்று அங்குள்ள இளைஞர்கள் எளிதில் அறிந்து கொள்கிறார்கள்.

### காந்திஜியின் உபதேசம்

"உங்களை யாராவது கெடுக்க முயன்றால் உங்களுடைய நகங்கள், பற்களைக்கொண்டாவது அக்காமுகனை எதிர்க்கத் தயங்கவேண்டாம்." இது பெண்களுக்குக் காந்தியடிகள் கூறிய உபதேசம்.

இவ்வுபதேசத்தை அப்படியே பின்பற்றியிருக்கிறார் அமெரிக்காவின் இலினாய்ஸ் மாநிலத்தைச் சேர்ந்த பெண். தன்னைக் கெடுக்க முயன்றவனை கடித்துக் குதறிவிட்டார்.

### கனவு நிஜமானது!

சிலரது கனவு சில சமயங்களில் பலித்துவிடுவது உண்டு. இண்ட்ராயனா சிமினியல்லோ என்பவள் தன் கணவனுடன் வாழ்ந்து வருகிறாள். இவர் குதிரைப் பந்தயத்தில் 16–ம் நம்பர் குதிரைமீது பணம் கட்டுவதாகவும் அது அமோக வெற்றிபெற்றுச் செல்வத்தை அவருக்கு அளிப்பதாகவும், கனவு கண்டாள். அதேபோல் அவள் மறுநாளே அந்தக் குதிரைமீது பந்தயம் கட்டினாள். அது அமோக வெற்றி பெற்று லட்சம் டாலரைப் பெற்றுக்கொடுத்தது.

-மணி.

### வீட்டுக் குறிப்புகள்

பெண்களுக்கு கர்ப்பச் சிதைவு ஏற்படுவதற்கு, பெண்கள் கனமான பொருட்களை தூக்குவதும் ஒரு காரணம். எனவே கர்ப்பமாகியிருக்கும் பெண்கள் எந்தச் சமயத்திலும் கனமான பொருட்களை தூக்கக்கூடாது.

0 0 0

**பொடுகு போகும்**

வெந்தயத்தை பாலில் ஊற வைத்து அரைத்து தேய்த்து தலைக்கு முழுகினால் பொடுகு போகும்.

0 0 0

**மாம்பழம்**

தினசரி காலை, மாலை சாப்பாட்டுக்குப்பின் சிறிதளவு மாம்பழம் சாப்பிட்டுவிட்டு இரவு படுக்கும்போது நல்ல பசுப்பால் ஒரு தம்ளர் குடித்து வந்தால் இரத்த விருத்தி உண்டாகும். உடல் பலம் பெறும். நரம்புத் தளர்ச்சி குணமாகும்.

0 0 0

### சமையல்பாகம்

**அரிசி உப்புமா**

பச்சை அரிசி — 1 சுண்டு
கடலைப் பருப்பு— 1 மேசைக் கரண்டி
செத்தல் மிளகாய் — 10
கடுகு — ½ தேக்கரண்டி
உளுத்தம்பருப்பு — 1 தேக கரண்டி
தேங்காய் துருவல் — 1 மேசைக் கரண்டி
வெங்காயம் — ¼ கிலோ
இஞ்சி — சிறுதுண்டு
உப்பு — தேவைக்கேற்ப
கறிவேப்பிலை — தேவைக் கேற்ப
நல்லெண்ணெய் — 2 மேசைக் கரண்டி

அரிசியையும், பருப்பையும் குறுணலாகத் திரித்தெடுக்கவும். எண்ணெய் சட்டியை அடுப்பில் வைத்து 2 மேசைக் கரண்டி எண்ணெய் விட்டு நறுக்கிய வெங்காயம் மிளகாய் இஞ்சி மற்றும் கடுகு கறிவேப்பிலை உளுத்தம் பருப்பு ஆகியவற்றை தாளித்து குறுணலிலும் பார்க்க இருமடங்கு நீர் ஊற்றி கொதிக்கவிடவும். நன்றாக கொதித்ததும் குறுணலை சிறிது சிறிதாகக் கொட்டி உப்பும் விட்டு இறக்கவும் இறக்கி மெல்லிய தணலில் மூடிவேகவிடவும். மேலும் மேலும் இரு தடவைகள் அடிப்பிடிக்காமல் இருக்க கிளறி விடவும். குறுணல் நன்றாக வெந்ததும் ஒரு மேசைக்

(11-ம் பக்கம் பார்க்க)

### சிங்கத்தை விரட்டிய வீரப் பெண்கள்

ஆண்கள் தான் பெண்களை விட வீரர்கள் துணிவு மிக்கவர்கள் என்பது பொதுவான கருத்து. இதை இந்தக் காலத்தில் சொல்ல முடியாது என்பதற்கு ஓர் உதாரணம் இங்கிலாந்தின் திறந்த வெளி மிருகக் காட்சிசாலையான சவாரிபார்கில் சிங்கம், புலி, கரடி போன்றவற்றை பார்க்க ஒரு கூட்டம் பஸ்ஸில் சென்றபோது அந்தபஸ் பழுதடைந்தது நின்று விட்டது. அப்போது ஒரு சிங்கம், பஸ் அருகில் வந்து பஸ்ஸில் உள்ளவர்கள் மீது பாய முயன்றது.

அப்போது பெண்கள் துணிவாக அச்சிங்கத்தை எதிர்த்து போராடி அதை விரட்டி அடித்தனர். ஆண்களோ பயத்தில் விழித்தவாறு பஸ்ஸிற்குள் பதுங்கி விட்டனர்.

— தேவி

# மாணவர் மன்றம்

## நல்லவன்

"அப்பா! எப்படியாவது இப்பொழுதே கீரிமலைக்கு நாளை போவதற்கான காசைத் தந்து விடுங்கோ" என்று சிவராமகிருஷ்ணன் இரவுவேலையில் இருந்து வீட்டிற்கு வநத உடனேயே அடம் பிடிக்கத் தொடங்கினான் தீபன்.

தீபனின்பாடசாலை முதலாம் தவணை விடுமுறை விட்டபடியால் தீபனும் அவனுடைய நண்பர்களும் மறுநாள் கீரிமலைக்குச் செல்வதற்குத் திட்டமிட்டிருந்தனர். அதற்காகத் தான் தீபன் தனது தந்தையிடம் பணம் கேட்டிருந்தான். தீபன் சிவராமகிருஷ்ணனின் தம்பதிகளுக்கு ஒரேயொரு புதல்வன் என்பதால் பெற்றோர்கள் அவனிடம் அளவற்ற பிரியம் கொண்டிருந்தனர். தீபனின் பிடிவாதம் அழுகையாக மாறியது.

அவர் ஒருவாறாக "இந்தா! ஐம்பது ரூபாய்" எனப் பணத்தை மகனிடம் நீட்டினார் தீபனும் மகிழ்ச்சியோடு பணத்தை வாங்கி கீரிமலைப் பயணத்தை நினைத்தபடி உறங்கிவிட்டான்.

மறுநாள் காலை எழுந்து தாய் கொடுத்த உணவு பார்சலுடன் பெற்றோரிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டான் பஸ்ஸில் நண்பர்களுடன் கீரிமலைக்கு சென்றடைந்தான்.

முதலில் கீரிமலைக் கேணியில் இறங்கினர். பல மணிநேரமாக ஒருவருக்கொருவர் தண்ணீரால் எற்றியும் குளித்துக் கொண்டிருந்தனர். ஆனால் தீபன் சிறுவயதிலேயே ஓரளவு பயந்த சுபாவம் உள்ளவனாதலால் கேணியின் ஓரமாக ஒரு பாறைக்கல்லில் அமர்ந்திருந்தான் அவர்களுடன் வந்தவர்களில் ராமு என்பவன் ஒரு குறும்புகாரன் தீபனை பயமுறுத்துவதற்காக பின்னால் வந்துதீபனின் கையை பிடித்தவாறு தள்ளினான், ராமுவின் பிடி நழுவியது. தீபன் கடலை நோக்கி விழுந்தான்.

"அ...ய்... யோ... அம்... மா!" தீபன் அலறினான். "என்ன தீபன்! ஏதாவது கெட்ட கனவு கண்டாயா" என்று அவனது கட்டிலருகே படுத்திருந்த தாய் தீபனை உலுப்பினாள். அப்போதுதான் தான் கீரிமலை சென்றது போல் சனவு கண்டதை தீபன் உணர்ந்தான். அம்மா! நான் நாளைக்கு கீரிமலைக்குப்போக வில்லை" என்றான்.

தாய் திகைத்து நின்றாள். "பெரியவர்களது துணையின்றி தனித்துத்தூர இடங்களிற்குப் போகக் கூடாது என்ற சரியான பாடத்தை இக்கனவு தந்தது" என நினைத்தவாறு மீண்டும் நித்திரையின் அரவணைப்பில் தீபன் மூழ்கினான். அந்தக் கனவு தந்த பாடத்தினால் அன்றிலிருந்து பிடிவாதக் குணம் நீங்கி நல்லவனாக மாறினான் தீபன்.

க. பிரபாகர்
கொக்குவில் இந்து கல்லூரி.

### கசப்பு

கசப்பான மருந்தை சாப்பிடுமுன் சிறிதளவு உப்புப் பொடியை சாப்பிட்டால் கசப்பு அவ்வளவு தெரியாது.

### இலக்கியம் பயில்வோம்

**கேள்விகள்:**

1. போர்ப் படைகளில் நான்கு பிரிவுகள் எவை?
2. மனிதனை உள்ளிருந்து உருவழிக்கும் உட்பகைவர்கள் யாவர்?
3 ஐந்திணை நிலங்கள் எவை?
4. ஐம்புலன்கள் எவை?
5. ஐம்பொறிகள் எவை?
6. ஐந்து வகை இலக்கணம் யாவை?
7. பெண்களின் ஏழு பருவங்கள் எவை?
8. நவமணிகள் எவை?
9. தமிழில் முதல் தோன்றிய அகராதி எது?
10. தமிழ் மொழியிலுள்ள இரண்டு நிகண்டுகள் எவை?
11* தமிழிலுள்ள மூன்று இலக்கண நூல்கள் எவை?
12. கிருஷ்ணர் அவதாரங்கள் எவை?

(விடைகள் 11ம பக்கம் பார்க்க)

### தெரிந்து கொள்ளுங்கள்

* கனிப்பொருள் தொழிற்சாலை-புல்மோட்டை
* புற்றுநோய் வைத்தியசாலை- மகரகம
* வைத்திய ஆராய்ச்சி நிலையம் – கொழும்பு
* உருக்கிரும்புத் தொழிற்சாலை - ஏருவெல
* ஓட்டுப்பலகைத் தொழிற்சாலை-ஜின்தோட்டை
* கட்டிப்பால் தொழிற்சாலை– பொலநறுவை
* எண்ணை சுத்திகரிப்பு நிலையம்-சப்புகஸ்கந்த

(11ம் பக்கம் பார்க்க)

### பச்சைக் கிளி

பச்சைக்கிளி பச்சைக்கிளி
பறந்து வா பச்சைக்கிளி
இச்சையாக நான் அழைத்தால்
ஏன் என்றும் கேட்பதில்லை

பச்சை வண்ணப் பட்டுச் சட்டை
பார்த்து வாங்கித் தந்தது யார்
பச்சை நிறச் சட்டையொன்று
பட்டமுடன் எனக்கும் தாவேன்

சிவப்பு நிறச் சங்கிலியும்
சீராக அணிந்து விட்டாய்
எனக்கு மொன்று தந்தாலே
நான் வருவேன் விளையாட

மாந்தோப்பில் போயிருந்து
மாம்பழங்கள் தின்றிடுவாய்
தேன்போலும் மாம்பழங்கள்
தேடி நீயும் கொண்டு வாராய்.

-கோகிலா மகேந்திரன்-

## கனடா கடிதம்

# தனிநாடு என்று கிடைக்கிறதோ

# அன்றே தமிழனுக்கு விடிவு!

யாழ்ப்பாணத்தில் அமைதியில்லாத காலத்தில் கனடா சென்ற ஒருவர் தனது சகோதரனுக்கு எழுதிய கடிதம். படித்துப் பாருங்கள்.

கனடா,
4-5-90

அன்புள்ள ரவிக்கு,

உனது 12-4-90 கடிதம் கிடைத்தது. நீங்கள் எல்லோரும் சுகமாக இருக்க இறைவன் அருள்புரிவாராக.

யாழ்ப்பாணத்தில்தற்போது அமைதியாகஇருப்பது அறிந்து மிகவும் சந்தோஷம். 1989ம் ஆண்டுபட்ட கஷ்டங்களுக்கு ஒரு விடிவு வந்துள்ளது.

1989ம் ஆண்டேஅமைதிஏற்பட்டிருந்தால் நான் கனடா வந்திருக்கத் தேவையில்லை. இங்கு எல்லாம் இயந்திரமயம். உழைப்பது செலவழிக்கத்தான் காணும். நான் தனிய இருப்பதனுல் ஓரளவு மிச்சம்பிடிக்க முடியும். குடும்பம் என்றுல் எல்லாம் செலவழிக்கத்தான் சரி. என்னைப் பொறுத்தவரை கனடா என்பது கானல்நீர் தான். அவன் கனடாவில் எக்கச்சக்கமாக உழைக்கின்றுன் என்று இலங்கையில் இருப்பவர்கள் நினைப்பார்கள். இங்கு வந்து அனுபவித்தால்தான் தெரியும் அதன் கஷ்டம். அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை. தெரியாத்தனமாக நான் கனடா வந்துவிட்டேன். அப்போதைய நாட்டுப்பிரச்னையால்தான் வெளிக்கிட நேரிட்டது. கொழும்பிலும் இருக்க முடியாது, யாழ்ப்பாணத்திலும் இருக்கமுடியாது என்பதனுல் வந்துவிட்டேன்.

### யாழ்.நகரில் கடை

நான் இங்குவர செலவழித்த காசை யாழ். நகரில் ஒரு கடை போட்டிருக்கலாம். எல்லாம் என் கஷ்ட காலம். இப்படி அலைக்கழிந்தது. நானும் 4 வருடத்தின்பின்பு திரும்பி வரும்யோசனை.

இங்கு 7 மாதம் சரியான குளிர். அத்தோடு டிசம்பர், ஜனவரி, பெப்ரவரி, மார்ச் 4 மாதங்களும் பனிக்கட்டி விழுந்தபடிதான். 4 மாதங்களும் கஷ்ட வாழ்க்கைதான். எனக்கு கனடாவிற்கு வந்ததிலிருந்தே வருத்தம்தான். கனடா சீதோஷ்ணம் ஒத்துவரவில்லை. இங்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காலநிலை. இலங்கையில் சீரானகாலநிலை. ஆனுல் கனடாவில் நேற்று 15 பாகை C என்றுல் நாளை 02 பாகை C ஆக வரும். பின்பு நாளை மறுதினம் 22 பாகை C. திடீர்திடீர் என்று வெப்பநிலை மாறுவதனுல் உடம்பிற்குஒத்து வராமல் வருத்தம்தான். நான் வந்துவிட்டேன். என்ன செய்வது என்று இருக்கிறேன்.

இங்கு வேலைகள் நிரந்தரமில்லை. நான் இதோடு 3வது வேலைசெய்கிறேன். அவர்களுக்கு ஆட்கள் தேவையென்றுல் வைத்திருப்பார்கள். இல்லாவிட்டால் அனுப்பிவிடுவார்கள்.

### படிப்பு அவசியம்

நான் உனக்கு சொல்லக்கூடியது ஒன்றுதான். நன்றுகப் படி. யாழ்ப்பாணத்தில் படிக்க சகல வசதிகளும் உண்டு. படிக்காதுவிட்டால் பின்னர் என்னைப்போல் கஷ்டப்படவேண்டி வரும். நான் தொடர்ந்து உயர்கல்விபடியாதுவிட்டதால் இப்போ மிகமிக மனம் வருந்துகிறேன். படித்து நல்ல வேலை எடுத்திருந்தால் ஏன் இப்படி நாடுவிட்டு நாடுவந்து அடிமை வாழ்க்கை வாழவேண்டும். எனவே கவனமாகப் படித்து முன்னுக்கு வரவும்.

கனடாவைப்பற்றி எழுதும்படி கடந்தகடிதத்தில் கேட்டிருந்தாய். கனடாவிலுள்ள இரண்டு பெரிய மாநிலங்கள் கியூபெக், ஒன்ராரியா. இவ்விரு மாநிலங்களில் தான் யாழ்ப்பாணத் தமிழர்கள் அதிகமாக வாழ்கிறுர்கள்.

### உயர் கல்வி

இங்கு வந்துள்ள தமிழர்களில் 90 வீதமானேர்உயர்கல்வி பெருதவர்கள். அவர்களால் ஒரு நல்ல உத்தியோகம் இங்கு பெறமுடியாது. ஏனென்றுல், ஆங்கிலமும், பிரெஞ்சும் படித்திருந்தால்தான் நல்ல வேலை பெறமுடியும். இல்லாவிட்டால் தொட்டாட்டு வேலை தான் செய்யவேண்டும்.

தொட்டாட்டுவேலை என்றுல் சாப்பாட்டுக் கோப்பை கழுவுதல், வெள்ளைக்கார சமையல்காரருக்கு உதவி செய்தல், துப்பரவுவேலைசெய்தல் என்பதாகும். இலங்கையில் நன்றுகப் படித்தவர்களும் பி. ஏ., பி. எஸ்சி., ரி. ஏ., வங்கி வேலை செய்தவர்களும் இங்கு தொட்டாட்டு வேலைதான் செய்கிறுர்கள். இங்கு வேலை எடுப்பது கஷ்டம். ஏனென்றுல்இலங்கைத் தராதரத்திற்கு இங்கு வேலை எடுக்கமுடியாது. கனடாவில் டிகிறி செய்தால் தான்வேலைதருவார்கள்.

இங்கு தொழிற்சாலை வேலை என்றுல் பார்சல் கட்டுதல், கூலி வேலை, உடுப்பு தைத்தல் ஸ்திரிக்கைசெய்தல் நூல்வெட்டுதல் போன்றபொதுவேலைகள் தான் உண்டு.

இங்கு வாழும் தமிழர்களில் 90 வீதமானவர்களுக்குமொழி பேசமுடியாததினுல், வெள்ளைக்காரன் எவ்வளவு வேலைவாங்க முடியுமோ, வாங்குவான். அத்தோடு ஏதாவது அவனுக்குசிறு பிரச்சனை என்று தோன்றினுல் உடனேவேலையைவிட்டு அனுப்பிவிடுவார். வேலையில்லைஎன்றுல் இங்கு வாழ்வது சிரமம். தமிழர்கள் வாய் இருந்தும் ஊமை போல் வாழவேண்டியதுதான் தலைவிதி.

தமிழனுக்கு என்று ஒரு தனி நாடு எப்போ கிடைக்கிறதோ அன்றேதமிழனுக்கு விடிவு ஏற்படும்.

அந்நியநாட்டில்என்ன செய்ய முடியும்ஏதோ வந்துவிட்டோம் உழைத்துக்கொண்டு இலங்கை போவோம் என்ற எண்ணம் தான்அநேகமானதமிழர்களின்

## தமிழர்கள் வாயிருந்தும் ஊமைபோல்வாழ்கிறுர்கள்

எண்ணம்.

இங்கு சம்பளம் ஆகக்குறைந்தது மணித்தியாலயம் 550 டாலர். உழைக்கும் பணத்தில் 25 வீதம்அரசாங்கத்திற்கு வரியாக செலுத்தவேண்டும். மற்றது வாங்கும் ஒவ்வொருபொருளுக்கும் வரி இங்கு அநேகமான இடங்களில் கிழமைச் சம்பளம்தான். சராசரி ஒரு தமிழனின் வருமானம் மாதம் 900 டாலர், இங்கு வீட்டு வாடகை 450 டாலர். மாதம் லொட்ஜ், காஸ் 50டாலர். சாப்பாட்டுக்கு ஒரு ஆளுக்கு 200 டாலர் செலவாகும். குழந்தைகள் உள்ள குடும்பம் என்றுல் கணவனின் வருமானத்தில் சீவிப்பது கஷ்டம், மனைவியும் வேலை செய்ய வேண்டும். குழந்தை ஒன்றுக்கு கிழமைக்குநர்சறிக்கு 60டாலர் செலவாகும். மனைவி வேலை செய்ய முடியாது போனுல் கணவன் ஒருநாளைக்கு16மணித்தியாலம் வேலைசெய்தால் தான் 2 குழந்தைகள்உள்ள ஒருகுடும்பம் சீவிக்க முடியும். ஒரு மனிதன் 16 மணித்தியாலம் வேலை செய்தால் அவன் இயந்திரம் மாதிரித்தான். இதேபோல 16 மணித்தியாலம் யாழ்ப்பாணத்தில் கஷ்டப்பட்டால் யாழ்ப்பாணத்தை சிங்கப்பூர் ஆக்க முடியும்.

விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும் மக்கள் சக்தியின் ஒற்றுமையும் இருந்தால் யாழ்ப்பாணம் சிங்கப்பூராக மாற முடியும். இங்கு வாழும் தமிழ் இளைஞர்கள் நன்றுக உழைத்து (ஒரு நாளைக்கு 16 மணித்தியாலம்) பணம் சேமித்து வைத்திருக்கிறுர்கள். இங்கு மாதத்திற்கு 5 கல்யாணமாவது நடைபெறுகிறது. இங்கு தமிழர்களின் கடைகள் பல உண்டு. சைவ கோயில்கள் உண்டு தமிழ் கலாசார நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இங்கு எல்லோராலும் வெறுக்கப்படும் ஒன்று என்னவென்றுல் காலநிலை இங்கு 7 மாதம் குளிர், டிசம்பர், ஜனவரி, பெப்ரவரி, மார்ச் இந்தமாதம் நாலும் சரியான குளிர் பனி விழுந்தபடி. தான் இருக்கும். வெப்பநிலை 20பாகை C தொடக்கம் 28 பாகை C வரை போகும்.

கனடா அமைதியான அழகான நாடு, மக்கள் சுதந்திரம் என்பதை இங்குதான் கண்கூடாக காணக்கூடியதாக இருக்கிறது.

(11-ம் பக்கம் பார்க்க)

---

உலக இசையில் தமிழிசையின் பங்கும் பழமையும் -2

# ஏழிசை பற்றிய

# பழம் தமிழ்க்குறிப்புகள்

சங்கீதவித்துவான் க. சிவபாலன்

(உதவி பேராசிரியர், இசையாசிரியர் பயிற்சி துறைத் தலைவர், தமிழ்நாடு அரசு மத்திய கர்நாடக இசைக் கல்லூரி, சென்னை)

ஒலியின் அடிப்படையினின்று அமைந்திருப்பது இசைக்கலை. உலகில் முதல் தோற்றம் ஒலியே எனப் பல சமயங்களும் கூறுகின்றன. இசை இயற்கையினின்றும் தோன்றியதால், இயற்கையின் நியதிகளைப் பின்பற்றி உலகிலுள்ள அனைத்து நாட்டு இசைகளிலும், ஏழிசை எனும் பகுப்புமுறை காணப்படுகிறது.

தொல்காப்பிய காலம்பற்றிய வேறுபாடுகள் இருந்தாலும், இந்நூல் கி.மு. ஏழாம் நூற்றுண்டிற்கு முந்தைய நூல் எனப் பலரும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

ஒலியானது உளத்தெழும் எண்ணத்தைக்கொண்டு எழுந்ததாகக் கருதப்படும்பொழுது அது இசையாகப் பெயர்பெறுவதைத் தொல்காப்பியம்வாயிலாக அறிகிறேும்.

''அளபிறந்துயிர்த்தலு
மொற்றிசை நீடலும்
உளவென மொழிப
.........இசையொடு சிவணிய
நரம்பின் மறை
என்மனுர் புலவர்''

எனும் வரிகளால் பாடலால் ஒலி நீள்வது இசை நீட்டமாகக் கருதப்பட்டுள்ளதையும், அளபெடை எழுத்துக்களுக்கும், இசைக்கும் இடையே உள்ள தொடர்பினையும் அறிகிறேும். தொல்காப்பியத்தில் ஐவகை நிலத்திற்கும் ஐவகை யாழினைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் நரம்புகளையுடைய பாலைகளை யாழினில் இசைக்கும் திறம் பெற்றவர்களாக இருத்தலால் ஏழிசையைப் பற்றியும் நன்கு அறிந்திருந்தனர் எனக் கூறலாம. ஏனெனில் ஏழிசையினுள்ளே பண் பிறக்கும் என்பதனை எல்லோரும் அறிவர்.

சங்ககால இலக்கியங்களிலிருந்து தமிழர்கள் ஒலியை ஏழாகப் பகுத்து முறைப்படுத்தி அவற்றை இசைகளாக வகுத்து அவற்றை ஏழிசையென அமைத்து அவற்றினின்று பண்களை உருவாக்கினர். சங்க காலத்தில் ஏழிசை பற்றி அறிந்திருந்தனர் என்பதனை.

''வடிவம் பல நின்றுனும்
அன்றெருகால்
ஏழிசை நூற் சங்கம்
இருந்தானும்''

எனும் வரிகள் தெரிவிக்கின்றன. பாண்டிய மன்னன் வடிம்பலம்ப நின்ற நன்மாறன் ஏழிசைகளைப் பற்றி அறிந்து, சங்கம் அமைத்து, இசை ஆய்ந்தவன் என அறிகிறேும். ''புரி நரம்பின் கொளைப்புகல் பாலை ஏழும்'' எனும் வரியில் செம்பாலை, படுமலைப் பாலை, செவ்வழிப் பாலை, அரும்பாலை, கோடிப்பாலை. விளரிப்பாலை, மேற்செம்பாலை எனும் இவ் ஏழ்பாலைகளும் அக்காலத்தில் வழக்கில் இருந்தன. பாலை எனும் சொல் ஏழிசையின் ஆரோசையையும், அமரோசையையும் குறிக்கும். அதாவது SCALE எனப்படும் உறுப்பு எனவும், ஏழிசையைக் கொண்ட பண் எனவும் பொருள் படும்.

ஏழிசைகளைப் பறவை, விலங்குகள் ஆகியவைகளின் ஒலிக்கு ஒப்பிட்டு சங்ககால நூல்களில் ஒன்றுன பஞ்சமரபு குறிப்பிடுகின்றது. பின்னர் வந்த நூல்கள் பஞ்சமரபினைப் பின் பற்றி, பறவை விலங்கின ஒலிகளுடன் இசை ஒலிகளை ஒப்பிட்டன. சங்க காலத்தில் இயற்கையைக் கண்டு களிப்புற்று, பறவைகள், விலங்குகள் ஆகியவைகளின் ஒலி இசை எழுத்துக்களின் ஒலிகள் போல அமைந்து இருந்தன. என, உவகையினுல் உவமை கூறினர். இவ்வாறு அவர்கள் கூறியிருப்பது அவர்கள் இசையின் பால் கொண்டிருந்த அன்பினையும், ஈடுபாட்டினையுமே காட்டுகிறது.

(தொடரும்)

---

## எல்லாமே சுடச்சுட

கொழும்பிற்கு புதிதாக வேலைக்கு சென்ற ஒருவருக்கு அங்கு எல்லாம் வசதியாகவே தான் இருந்தது. ஆனுல் ஒரே ஒரு குறைமட்டும அவரை, வாட்டியது. பிறந்த நாள்முதல் வீட்டிலேயே சாப்பிட்டுப்பழகிய அவருக்கு ஹோட்டல் சாப்பாடு சாப்பிடுவது நரக வேதனையாக இருந்தது.

என்ன செய்வது. வேலைக்கு வந்துவிட்டு சாப்பிடாமல் இருக்கமுடியுமா? தானுகச் சமைத்துச் சாப்பிடவும் நேரமில்லை. வேலையைவிட்டு வீட்டுக்குத்திரும்பினுலும் கஷ்டம்.

எனவே சிரமத்தைப்பாராது கொழும்பில், ஒவ்வொரு ஹோட்டலாகச் சென்று ஒழுங்காகவும், சுத்தமாகவும் சமையல் செய்கிறுர்களா எனப் பின் பக்கம் போய்ப்பார்த்தார். எந்தக் ஹோட்டலும் பிடிக்கவில்லை. கடைசியில் ஒரு யோசனை தோன்றவே, அப்பகுதி வாசிகளிடம் எந்தக் ஹோட்டல் சிறந்தது என்று விசாரித்தார். சுமார் 10பேரிடமாவது கேட்டிருப்பார். எல்லோரும் 'யோக பவனம்' ஹோட்டல்தான் சிறந்தது என்றனர்.

முன்பே இப்படி விசாரித்து கஷ்டமில்லாமல் போயிருக்கலாமே என்று நினைத்தவாறு யோகபவனம் ஹோட்டலை அடைந்தார்.

தான் வந்த காரியத்தைச் சொன்னவுடன் ''இங்கு எல்லாம் சுத்தமாகவும், சுடச்சுடத்தான்வைத்திருப்போம்'' என்று சொல்லி அருகில் ஒரு கையால் வீசிக்கொண்டே சாப்பிட்டுக்கொண்டிருந்தவரைச் சுட்டிக் காட்டிய முதலாளி, பாருங்கள் எல்லாமே கடச்சுட இருப்பதால்தான்,

(11ம்- பக்கம் பார்க்க)

---

## குழந்தைக்கு பெயர் ரஷ்யா!

ஒரு சமயம் தந்தை பெரியாரிடம் சிலர் தமது குழந்தைகளுக்கு பெயர் வைக்க சொல்லி கொண்டு வந்தனர். அதற்கு அவர் ரஷ்யா, என்று ஒரு குழந்தைக்கும் ஜேர்மனி என்று மற்றொரு குழந்தைக்கும் பெயர் சூட்டினுர்.

கூடியிருந்தோர் திகைத்தார்கள். ''என்னய்யா' நாட்டின் பெயரை சூட்டியிருக்கின்றீர்களே?' என்றனர்.

அதற்கு பெரியார் அமைதியாக சிதம்பரம் பழனி என்று ஊர் பெயர்களை குழந்தைகளுக்கு வைத்திருக்கிறீர்களே அதற்கு இது ஒன்றும் குறைவில்லை' என்றுர்.

# பல்சுவை விருந்து

## பிஸ்கட்

'பிஸ்கோடாமா', என்னும் இலத்தீன் சொல்லிருந்தே 'பிஸ்கட்' என்ற ஆங்கிலச் சொல் பிறந்தது. பிஸ்கோடாமா என்றால் இரண்டு முறை சுடப்பட்டது என்று பொருள்.

## டெலிபோன் திருமணம்

பெதட்லபி என்பவர் வாஷிங்டனில் இருந்தார். ஸ்டீவ் ஸ்பென்சர் என்பவர் சவுதி அரேபியாவில் ஒரு பகுதியில் இருக்கிறார். இவர்களுக்கிடையே ஆயிரக்கணக்கான மைல் இடைவெளி தூரம். இவர்கள் டெலிபோன் மூலமே பேசி தங்கள் காதலை வளர்த்துக்கொண்டார்கள். திருமணம் செய்து கொள்ளவும் தீர்மானித்தனர். ஸ்டென் சருக்கு விடுமுறை கிடைக்காததினால் கடைசியில் இருவரும் திருமணத்தையும்டெலிபோன் மூலமாகவே முடித்துக் கொண்டனர்.

## ஆண் குழந்தைகள்

### கலிபோர்னியாவில்

சான்பெட்ரய என்ற இடத்திலொருகுடும்பம். இந்தக் குடும்பத்தில் 5 தலைமுறையாக சுமார் 40 பிள்ளைகள் பிறந்து இருக்கிறார்கள். இவர்கள் எல்லோருமே ஆண்கள்தான் ஒரு பெண் குழந்தைகூட இந்தக் குடும்பத்தில் இதுவரை பிறந்ததில்லை. எந்தக் குடும்பத்து பெண்களை இவர்கள் மணந்தாலும் பிறப்பது எல்லாம் ஆண் பிள்ளைகளாகவே இருக்கின்றன.

## தூக்கம்

மிருகங்களில் குறைந்த நேரம் தூங்கும் மிருகம் கழுதை. இது ஒருநாளில் 30 நிமிடங்கள் மட்டுமே தூங்கும்.

## பதவி வேண்டாம்

பதவி, பதவி என்று அலையும் அரசியல் தலைவர்களைப்பார்க்கிறோம். மூன்று முறை அவுஸ்திரேலியாவின் பிரதமர் பதவியையும் ஒன் பது முறை அவுஸ்திரேலியாவின் மந்திரி சபையில் அமைச்சர் பதவியையும் ஏற்க அழைக்கப்பட்டபோது ஒருவர் மறுத்து விட்டார். ஆல்ஃபிரட் டீ கான் (1856 — 1919) என்ற பெயருடைய இவர்தான் பதவியை ஏற்கமறுத்த அரசியல் வாதியாகும்.

## கோரிக்கை

போர்ணியோவில் கலாபிட் என்னும் இனத்தைச் சேர்ந்தவர்களிடம் ஒரு விநோத வழக்கம் இருந்துவருகிறது. அவர்களில் பெண்கள்தான் ஆண்களைப்பார்த்து திருமணம் செய்துகொள்ளுமாறு கேட்பார்கள். அந்தக் கோரிக்கையை ஆண்கள் மறுக்கக்கூடாது.

## திருட்டு

மிலான் என்னும் இடம் இத்தாலியில் இருக்கிறது. இங்குள்ள சுப்பர் மார்க்கட்டில் ஒரு திருட்டு நடந்து விட்டது. எல்லாக் கதவுகளையும் உடனே மூடிவிட்டு பொலிஸாரை வரவழைத்தார்கள். கியே லன்னி மாண்டி என்றவர் இந்த திருட்டை நடத்திய ஆசாமி கண்ணுப்பெட்டிக்குள்புகுந்து ஒரு அசைவுமில்லாமல் ஒரு சாமியார் சிலைபோல் போஸ் கொடுத்தபடி நின்றுவிட்டான். பொலிஸ் பலமுறைஇந்தக் கண்ணுப் பெட்டடியை தாண்டிபோன போதும் சிலயாக நின்ற இவனை சந்தேகம் கொ. ளவில்லை. அப்படியே நின்று இவன் ஒரு தும்மலை போடவே பிடிபட்டுவிட்டான்.

## 4 கோடி ரசிகர்கள்

பிரபல நாவலாசிரியை அகஸ்தா கிறிஸ்தி எழுதிய 'எலிப்பொறி' என்ற நாடகம் 215 வருடங்களுக்குமேல் நடத்தப்பட்டது. இதில் 134 நாடக நட்சத்திரங்கள் நடித்திருக்கிறார்கள். 41 நாடுகளில் நடத்தப்பட்டிருக்கும் இந் நாடகத்தை 4 கோடி பேர் பார்த்து ரசித்திருக்கிறார்கள்.

## காருக்கு நிலக்கரி

அமெரிக்காவின் பிரபல மோட்டார் உற்பத்தி நிறுவனமான ஜெனரல் மோட்டார் கார்ப்ரேஜன் நிறுவனம் நிலக்கரிமாவினால் ஓடும் காரை தயாரித்து உள்ளது. 'பெட்ரோல் தட்டுப்பாடு விலை உயர்வு ஆகியவற்றின் காரணமாக இந்த மாற்று எரி பொருளைஇந்நிறுவனம் தயாரித்து உள்ளது.

## இடைவெளி

குழந்தைகளை பெற்றுக் கொள்வதில் மட்டும் இடைவெளி தேவை என்று எண்ண வேண்டாம். வேளாண்மையிலும் பயிர்களுக்கு இடையே சரியான இடைவெளி தேவை. இதனை நாட்டுப்புற மக்களுக்கு விளங்கும்படியாக பின்வரும் உதாரணங்களால் நாடோடி வழக்கு விளக்குகின்றது.

குறுவைக்கு — நண்டோட
சம்பாவிற்கு — நரியோட
கரும்புக்கு — பசுவோட
வாழைக்கு — வண்டியோட
தென்னைக்கு — தேர் ஓட

## புகை என்றால் பகை!

ராஜஸ்தானில் இருக்கும் ஒரு கிராமத்தில் ஒருவர் கூடப் புகைப் பிடிப்பது இல்லை. இந்த ஊரில் இருக்கும் யாராவது புகைபிடிப்பதை கண்டு பிடித்து சொல்பவர்க்கு 5 ரூபா பரிசும் புகைப்பிடிப்பவருக்கு 51ரூபா அபராதமும்விதிக்கப்படுகிறது இந்த அளவிற்கு கட்டுப்பாடுடன் இருந்து வருகிறார்கள் புகை என்றால் இந்தக் கிராமவாசிகளுக்கு பகை.

## 30 நச்சுப்பொருள்

புகையிலையில் நிகோடின் என்ற விஷச்சத்து இருப்பது அநேகமாக எல்லோருக்கும் தெரியும். புகையிலையில் நிக்கோடின் விஷத்துடன் வேறு 30 நச்சுப் பொருள்களும் இருப்பது அநேகமாகப்பலருக்கு தெரியாது.

## மரப்பல்

ஜோர்ஜ் வாஷிங்டனின் பொய்ப்பல், மரத்தால் செய்தது. இதனை செய்தவர் பால்ரெவ்ரி, வாஷிங்டன் சிரித்த படி உள்ள படம் கிடையாது.

## தலைகீழாக நடனம்

மனிதர்களைப் போலவே பெண்களைக் கவர்வதற்காக ஆண் பறவைகள் பாடுகின்றன; ஆடுகின்றன. சண்டையிடுகின்றன. அதன் உச்சநிலை எது தெரியுமா? பாரடைஸ் என்ற பறவை தலைகீழாக நடனமாடியும் தனது அழகை வெளிப்படுத்துகிறது.

## உணவுப் பொருள்

17ம் நூற்றாண்டில் தக்காளியை ஒரு விஷப்பொருளாக நினைத்து ஒதுக்கிவைத்தார்கள். 18ம்நூற்றாண்டில் தான் இதனை உணவுப் பொருளாக ஏற்றுக் கொண்டார்கள்.

# நாட்டு நடப்புகள்

## ஆபிரிக்கா

உலகிலேயே அதிகக் கைதிகளை கொண்ட நாடு ஆபிரிக்காதான். இங்கு லட்சம் பேருக்கு 500 பேர் என்ற விகிதத்தில் சிறையில் இருக்கிறார்கள்.

## பிரான்ஸ்

இங்கு வாழும் தங்கள் குழந்தைகளுக்கு தங்கள் இஷ்டப்படி பெயர் சூட்ட முடியாது. அரசாங்க பட்டியலில் உள்ள பெயர்களில் ஒன்றையே தேர்ந்தெடுக்கவேண்டும்.

## டென்மார்க்

இங்கு ஒருவர் தன் மனைவியையும் 6 குழந்தைகளையும் கொன்றுவிட்டார். ஒரு தெய்வீகச் சாது கனவில் தோன்றிய தாகவும், உனக்கு குடும்பமே வேண்டாம் என்று தன்னிடம் கூறியதாகவும் அதனாலேயே தன் குடும்பத்தார் அனைவரையும் கொன்றதாக நீதிமன்றத்தில் கூறினர்.

## சுவிடன்

ஐரோப்பா கண்டத்திலேயே மிகச் சிறிய நாடு சுவிடன் உலகப்போரின் கோரப்பிடியில் சிக்காத நாடு. பரப்பளவு 1,73,000 சதுர மைல். பாதிப் பரப்பு காடுகள். மக்கள் தொகை 80 லட்சம். திக்குச்சி, குளிர்சாதனப் பெட்டி டெலிபோன் டீசல் இயந்திரம் தேமா மீட்டர் மண்ணெண்ணை அடுப்பு அனைத்தும் சுவிடன் கண்டுபிடிப்புகள்.

-கணேசன்

## தங்கத் தண்ணீர்

ஜப்பானில் சில ஹோட்டல்களில், தங்கம் கலந்த தண்ணீரை வைத்திருக்கிறார்கள் இந்தத் தங்கத் தண்ணீரில் ஒரு முறை குளித்தால் ஆயுள் மூன்று ஆண்டுகள் அதிகமாகும். ஒருமுறை குளிக்க கட்டணம் எவ்வளவு தெரியுமா? சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய்.

## 8513 பேருடன் கைகுலுக்கினர்

புத்தாண்டு அன்று ஜனவரி முதல்தேதி. தன்னைச் சந்தித்து புத்தாண்டு வாழ்த்து கூறவந்த 8513 பேருடன் கைகுலுக்கிய பெருமை முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி தியோடர் ருஸ்வெல்டைச் சாரும். ஒரே தினத்தில் அத்தனை அதிக அளவு பேருடன் கைகுலுக்கிய பிரமுகர் வேறு யாரும் இல்லை. இது ஒரு உலக சாதனை.

## 6 வயது எழுத்தாளன்

லூஷியாணு ஃப்ளுரி டாக்குஸ் ஆறே வயதான இந்த பிரேசில் சிறுவன் உலக சாதனையாளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளான். குழந்தைகளுக்கான மூன்று புத்தகங்களை எழுதியவன் என்ற பெருமை இந்தச் சிறுவனுக்கேயே இவனுக்கு கிடைத்துவிட்டது.

## தமிழில் தீர்ப்பு

தமிழ்நாட்டிலேயேஇன்றல்ல அரசர்கள் ஆட்சி செலுத்திய அந்தக் காலத்திலேயே புதுக்கோட்டை சமஸ்தானகோர்ட்டுகளில்தான் முதன் முதலாக தமிழில் சாட்சியங்களை குறிப்பெடுத்தும் தீர்ப்பை தமிழில் எழுதியும் நீதிபதிகள்பணிபுரிந்தார்கள். அதற்கு வழிகாட்டிய தமிழறிஞர் கி. வி. தாமோதரம்பிள்ளை.

# ஞாயிறு மஞ்சரி.

## குழிகள்

ஜேர்மனியைச் சேர்ந்த ஜே. எச். சேதாம் என்பவர் குழி தோண்டும் தொழிலாளி. 50 ஆண்டுகளில்இவர் 28,311குழிகளை தோண்டியிருக்கிறார்.

## பழமொழி

கடுமையாக உழைத்த பின் களைத்துப்போய் படுக்கட்டுமே. அப்போது கிடைக்கும் இன்பத்திற்கு ஈடு இணை வேறு ஏதாவது உண்டா?
—பெர்னட்ஷா

அரைமணி நேரம் தானே என்று அற்பமாக கருதாமல் அந்த அரை மணி நேரத்திலும் அற்புதமான காரியங்களை செய்து கொண்டிருப்பவனே மனிதன்.
—கதே

கடமையை உணரும் சக்தியும், கடமையைச் செய்யும் தன்மையும் கொண்ட மனிதனுக்குத்தான் கடவுள் காட்சி தருவார்.
—ஸ்வீடன்போர்க்

குழந்தைகளை அன்பால் திருத்தவேண்டும் பிரம்பால் அல்ல.
—ரயா

புனிதமான செயல்களால் வாழ்வதே புகழ்
—சாக்ரடீஸ்

நூறுமுறை கேட்டதைவிட ஒருமுறை பார்ப்பது சிறந்தது.
—சீன பழமொழி

## நடக்க முடியாதவர்

18 ஆண்டுகளாக ஒருவர் படுக்கையில் கிடந்தார். இவரின் பெயர் ஹட்ஸன். நியுயோர்க்கில் வசிக்கிறார். வயது 42 தன் உடல் நிறையை தாங்க கால்களுக்கு சக்தியில்லாதினால் படுத்த படுக்கையாக கிடந்தார். டாக்டரின் உதவியால் 27 கிலோவிலிருந்து 235 கிலோவிற்கு நிறைகுறைந்துள்ளார். இன்னும் மூன்று ஆண்டுகளில் நிறை 70கிலோவுக்கு குறைந்து விடும் என்கிறார்.

## ருத்பிரஷ்

நெப்போலியன் பயன்படுத்திய ருத்பிரஸ் 42 ஆயிரத்து 90 டாலருக்கு ஏலம் போனது வார்ட்டர்லூ யுத்தத்தில் அவர் விட்டுச்சென்ற இந்த பிரசை. ஒரு பிரிட்டிஷ் அதிகாரி எடுத்து வைத்திருந்தார். வெள்ளியிலான இந்த பிரஷ்ஷுடியூனிக் தகரில் ஏலமிடப்பட்டது.

## உயில்

உயில் எழுதும் வழக்கம் முதன் முதலில் கி. பி. 1102ல் ஆரம்பமாயிற்று. சிசிலி என்னும் நாட்டின் மன்னனான ரோஜர் என்பவர் அதை துவக்கிவைத்தான். அதற்குமுன்பெல்லாம் மனிதர்களின் மரணத்திற்குப் பின் உண்டான விருப்பத்தை ஊரின் நடுவே நின்று ஓர் ஆள் அறிவிப்பான்.

# வழக்கறிஞரிடம் சாட்சி கேட்ட கேள்வி

அவர் ஒரு புகழ்பெற்ற வழக்கறிஞர், எவரையும் தன் கேள்விக் கணைகளால் மடக்கி விடுவார். சாட்சிகளை நுணுக்கமாகத் துளைத்தெடுப்பது அவரது வழக்கம்.

ஒருமுறை அவரது கேள்விகளுக்கு வழக்காளி தரப்பு சாட்சி ஒருவன், விளக்கமான பதில் அளித்துக் கொண்டிருந்தான்.

உடனே அந்த வழக்கறிஞர் என் கேள்விகளுக்கு 'ஆம்' அல்லது 'இல்லை' என்று சுருக்கமாகப் பதிலளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

சாட்சியோ உங்களுடைய ஒவ்வொரு கேள்விகளுக்கும் ஆம் அல்லது இல்லை என்று பதிலளிப்பது கஷ்டம். சில கேள்விகளுக்கு விளக்கமாகவே பதிலளிக்க வேண்டும் என்றான்.

"நீர்" கூறுவது தவறு, எல்லாக் கேள்விகளுக்குமே ஆம் அல்லது இல்லை என்று பதிலளிக்கலாம். என்று கூறிய வழக்கறிஞர், நீதிமன்றத்தை ஒரு தடவை சுற்றி பார்த்துவிட்டு 'அதில் என்னை கஷ்டமிருக்கிறது?' என்றார்.

உடனே சாட்சி, அப்படியானால் சரி நான் கேட்கிற கேள்விக்கு உங்களால் 'ஆம்' அல்லது 'இல்லை' என்று பதிலளிக்க முடியுமா? என்றான்.

"ஏன் முடியாது" என்று கூறிய வழக்கறிஞர் 'கேட்டுப்பாரும்' என்றார்.

சாட்சி வழக்கறிஞரை பார்த்துக்கேட்ட கேள்வி ''தயவு செய்து ஆம் அல்லது இல்லை என்று பதிலளியுங்கள். ''திருடுவதை தாங்கள் இப்போது விட்டு விட்டீர்களா.''

—தனு

### கிழக்கும் மேற்கும் -3

# தாஜ்மஹாலும் பிரமிட்டும்!

**ஷாஜஹான் - கி. பி. 1627 - 1658**

**பிரமிட்ஸ் - கி. மு. 2686 - 5160**

**- முருகு -**

இறந்தவர் பொருட்டு இந்த
உலகினில் அமைத்த சின்ன
இரண்டுமே உலகம் போற்றும்
அதிசய மாகக் கண்டோம்!
இரண்டையும் அமைத்து வைத்த
நுட்பமே மதியின் நுட்பம்!
இரண்டினில் கிழக்கில் ஒன்று
மேற்கினில் மற்ற தொன்று

★

ஜாலங்கள் பலவும் காட்டும்
விஞ்ஞானம் வளராக் காலம்!
காலங்கள் தோறும் ஓடும்
நதிக்கரை தனையே சுற்றிச்
சீலங்கள் பலவும் போற்றி
மனிதர்கள் வாழ்ந்த காலம்
ஞாலத்தின் மேற்கில் ஓடும்
நைலோரம் எகிப்தில் அன்று
சீலங்கள் பலவும் தோன்றிச்
சிறப்புற்றுத் திகழ்ந்த காலம்
சீலத்தில் ஒன்று இன்றும்
ஞாலத்தை வியப்பில் ஆழ்த்தும்
காலத்தின் கையிற் சிக்கிக்
காசினி விட்டுச் சென்றோர்
கோலமார் யாக்கை என்றும்
பழுதின்றி இருக்கும் வண்ணம்
தைலங்கள் பலவும் இட்டு
அவைகளை வைத்துமூடிச்
சைலங்கள் போலக் கல்லார்
''கூர்நுதி''க் கோபு ரங்கள்
அமைத்தனர் எகிப்து மக்கள்!
ஞானங்கள் வளர்ந்த இன்றும்
அமைப்பதன் நுட்பம் கண்டு
வியக்கின்றார்! பெருமை யன்றோ

★

மாமன்னன் ஷாஜ ஹான்;தன்
ஹிந்துஸ்தான் இராச்சி யத்தை
மாநகர் அக்ரா தன்னில்
அமர்ந்தர சாட்சி செய்தான்!
மாமன்னன் மனதை வென்று
வாழ்விலும் பங்கு கொண்டாள்
மாதரும் வியந்து நோக்கும்
பேரெழில் அரசி மும்தாஜ்
காதலில் இணைந்து கொண்ட
ஷாஜஹான் மும்தாஜ் வாழ்வில்
காலன்கை நீண்டு கொள்ளக்
காதலி மும்தாஜ் இந்தக்
காசினி வாழ்வை விட்டாள்!
ஷாஜஹான் அமைதி
கெட்டான்!
காதலின் உயர்வைக் காட்டக்
காதலின் நினைவை நாட்டக்
காலத்தை வென்று நிற்கும்
சின்னமென் றமைக்க வேண்டி
ஞாலத்தி லென்றும் நிற்கும்
சின்னமொன் றமைக்களண்ணிக்
கலைவல்லோன் உஸ்தாத் இலாவைப்
பணித்தனன் மன்னர் மன்னன்!
கலையெலாம் கோவில் கொள்ளும்
காண்பவர் மனதை வெல்லும்
கலையொளிர் காதற் சின்னம்
தாஜ்மஹால் நிமிர்ந்த தாங்கே!
கலைஞன் வண்ணம் எந்தக்
காலமும் நிலைக்கு மாங்கே!

★

சிறந்தநற் கலைகள் சேர்த்து
அவற்றுடன் வியப்பும் சேர்த்து
இறந்தவர் நினைவைப் போற்றச்
சின்னங்கள் அமைத்தார்!
அந்நாள்!!
சிறந்தநற் கலைகள் கண்டோம்!'
அவற்றிலே வியப்பும்
கொண்டோம்!!
இறப்பிலும் சிறப்பைக் கண்டோம்
துன்பிலும் இன்பம்
கொண்டோம்!!

# வைத்தியகலாநிதி பதிலளிக்கின்றார்

கேள்வி:- நான் கடந்த எட்டு வருடங்களாக நீரிழிவு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளேன். அன்று தொடக்கம் இன்சுலின் மருந்தையே ஏற்றி வருகிறேன். இந்நோய் ஆரம்பமாகும்போது எனக்கு வயது 13 இப்போது 21 வயதாகின்றது என்னுடைய உடல் வயதுக்கு ஏற்றபடி வளர்ச்சி அடையவில்லை. நான் உணவில் மிகுந்த கட்டுப்பாட்டுடன் உள்ளேன். என் வளர்ச்சியின் தடைக்கு காரணமென்ன?

எம். செல்வகுமார்
இணுவில்

பதில்:- உங்களுக்கு இருக்கும் நீரிழிவு நோய் இயற்கையாகவே உடலில் இன்சுலின் (Insulin) பற்றாக்குறையால் ஏற்பட்டிருக்கிறது. வளர்ச்சி எனக்கூறும்போது, நிறையைக் குறிப்பிடுகிறீர்களா அல்லது உயரத்தைக் குறிபிடுகிறீர்களா என்பது தெரியவில்லை. நிறையில் பாதிப்பு இருக்குமேயானால், அது நீரழிவு நோய் கட்டுப்பாட்டில் இல்லை என்பதை குறிக்கக்கூடும். இதற்கு நீங்கள் நேரடியாக வைத்திய ஆலோசனை பெற்று சலம், குருதி ஆகியவற்றை காலத்திற்கு காலம் பரிசோதிப்பதன் மூலம் நோயின் கட்டுப்பாட்டை அறிந்து கொள்ளலாம். நீங்கள் எடுக்கக்கூடிய உணவு விபரங்கள் பத்திரிகை வாயிலாக கொடுப்பதற்கு இடமளிக்காது. ஒரே வகையான உணவை தொடர்ந்தும் எடுக்க இயலாது. வித்தியாசமான உணவு வகைகளை வித்தியாசமான அளவில் எடுக்க வேண்டி இருக்கும். நீங்கள் யாழ் போதனா வைத்தியசாலையில் நீரழிவுக்கான சிகிச்சைப் பிரிவில் மருந்து எடுப்பவராக இருந்தால் அவர்களிட மிருந்து நீங்கள் பாவிக்கக்கூடிய உணவு விபரங்களை அச்சடித்த பிரதியாகப்பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி:- முகத்தில் ஏற்படும் பருக்களை எவ்வாறு தடுக்கலாம்? பருக்களினால் ஏற்படும் வடுக்களை எவ்வாறு நீக்கலாம்? இது என்ன காரணத்தினால் ஏற்படுகின்றது?

பார்த்தீபன்
புன்னாலைக்கட்டுவன்

பதில்:- புங்குடுதீவு......... அவர்களுககு கொடுத்த பதிலை 20-05-90ல் வெளிவந்த ஈழநாடுவில் வாசிக்கவும். பருக்களை நகங்களினால் காயப்படுத்துவதாலேயே பொதுவாக வடுக்கள் ஏற்படுகின்றன. ஆழமில்லாத காயங்களினால் ஏற்படும் வடுக்கள் காலப்போக்கில் மறைந்து விடும். காயம் ஆழமாக ஏற்படுத்துப்பட்டிருந்தால் வடுக்கள் நிரந்தரமாக காணப்படலாம். இவற்றை மருந்துகளினால் போக்க முடியாது.

கேள்வி:- எனக்கு வயது 21 திருமணமாகவில்லை. கடந்த மூன்று ஆண்டுகளாக ''வெள்ளை'' படுகின்றது. பலவித சிகிச்சைகள் பெற்றும் நிவாரணம் பெறவில்லை. உடல் நிறையும் குறைகின்றது. தகுந்த பரிகாரம் கூறவும்.

''சோதி''
திருநெல்வேலி

பதில்:- வெள்ளை வருவது என்பது பெண்களில் ஏற்படும் இயற்கையான நிகழ்ச்சி. யோனிக்குழாயின் உட்சுவர் கலங்கள் காலத்துக்கு காலம் மாற்றப்படுவதுடன் இக்கலங்களிற்கிடையிலுள்ள சுரப்பியிலிருந்து வெளியேற்றப்படும் சுரப்பே நீங்கள்கூறும் வெள்ளை வருதல்.

உணர்ச்சியடையும் போது வெள்ளை படுதல் அதிகரிக்கும். இத்தகைய சாதாரண வெள்ளைபடுதலினால் உடலிற்கு ஒருவித தீங்கும் ஏற்படாது.

இச்சாதாரண வெள்ளை வருதல் பின்வரும் சந்தர்ப்பங்களில் நோயின் அறிகுறியாக இருக்கக்கூடும்.

(1) வெள்ளையாக இராது மஞ்சள் அல்லது இளம் பச்சை அல்லது குருதி கலந்ததாக இருப்பின்.

(2) துர்நாற்றம் வீசுவதாக இருப்பின்.

(3) பெண்ணுறுப்பில்சொறி யல்லது கடியிருக்குமேயானல்.

மேற்கூறிய சந்தர்ப்பங்களில் தகுந்த வைத்திய ஆலோசனையைப் பெறவேண்டும்.

# நிர்வாகத்தில் நிகழ்பவை

★ கண்டிப் பகுதியில் தோட்டங்களைப் பராமரிக்கும் சபை ஒரு கருமத்தை நிறைவேற்ற திட்டம் ஒன்றை தயாரித்து அதற்கான தொகை இரண்டு லட்சம் எனக்கணக்கிட்டது. வேலையும் செய்யப்பட்டது. கணக்காளர் நாயகம் கணக்குகளை பரிசோதனை செய்த பொழுது அவ்வேலையை ரூபா 25,000/-க்குள் செய்து முடிக்கலாம் எனக் குறிப்பு எழுதியுள்ளார். இந்த வேலைக்கு திட்டம் போட்டவர் பொதுமக்களின் பணத்தை எத்தனை மடங்கு உயர்த்தி உள்ளார். பொதுப்பணம் என்றால் இப்படித்தான் விரயம் செய்ய வேண்டுமா?

★ அண்மையில் பிரதேசசபை ஒன்றின் கீழ் உள்ள வீதி திருத்தம் பற்றி அப்பகுதியில் உள்ள சங்கம் ஒன்று சம்பந்தப்பட்ட சபைக்கு கடிதம் எழுதியிருந்தது. சில தினங்களுக்குள் வீதி திருத்தம் நடைபெற்றது. பாராட்டப்படவேண்டியது தான். இந்த வீச்சில் திருத்தப்படாத மிகுதி பகுதியையும் திருத்த நடவடிக்கை எடுப்பார்கள் என நம்புவோம்.

★ பொறுப்பான பதவியில் உள்ளவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதும், தங்கள் பொறுப்புகளை உரியவர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும். இதனால் பல கஷ்டங்கள் பொது மக்களுக்கு ஏற்படுவது இயல்பே. இடமாற்றங்களை செய்யும் உயர் அதிகாரிகள் இதனை உறுதிப்படுத்தல்வேண்டும். பல பதவிகளை ஒருவர் வகிப்பதனால் அரசின் கீழ் கருமம் செய்பவர்களுக்கும் சுகமில்லை, அவர்களுக்கும் ஒரு நன்மை இல்லை. இதனை தனிப்பட்ட காரணங்களுக்கு அப்பால் சிந்தித்தால் செயற்பாடு மிகவும் சுலபமாகும்.

★ யாழ் செயலகத்தில் கடவுச்சீட்டு மாத்திரம் பெறுவதற்கே ஒழுங்கு உண்டு எனத் தெரிகிறது. பெயர் மாற்றம் கால நீடிப்பு போன்ற பிறவற்றையும் இங்கேயே செய்வதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்தால் இதனால் பொதுமக்களுக்கு அதிக நன்மை உண்டு. நிர்வாக கஷ்டங்கள் இருக்கலாம். ஆனல் சம்பந்தப்பட்டவர்கள் இதனை உணர்ந்து நடவடிக்கை எடுத்தால் அதனல் நன்மை உண்டு.

- உற்றுநோக்கி

## தனிநாடு

(9ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு படிப்பதற்கு நல்ல வசதிகள் உண்டு. தரப்படுத்தல் அறவே இல்லை. திறமை இருந்தால் யாரும் படித்து நல்ல உத்தியோகம் பெறமுடியும். தமிழன் கனடாவில் தற்சமயம் கஷ்டப்பட்டு வாழ்கிறான்; ஆனல் இன்னும் 30 வருடங்கள் சென்றால் நல்ல நிலைக்கு வரமுடியும். ஏனென்றால் இங்கு பிறக்கும் தமிழ் குழந்தைகள் படித்து நன்றாக வரமுடியும். இங்கு படிக்கும் பல நாட்டு குழந்தைகளில் ஆசியா நாட்டு குழந்தைகள் தான் மிகவும் கெட்டிக்காரர்கள் என்று இந்த நாட்டு பத்திரிகளே உண்மையை வெளியிட்டுள்ளன. இங்கு தியேட்டர்களில் கிழமைக்கு ஒருதரம் இந்தியாவில் வெளியிட்ட புதிய தமிழ் திரைப்படங்கள் காண்பிக்கப்படுகின்றது. பெருந்திரளான தமிழ் மக்கள் வந்து படம் பார்ப்பார்கள். இங்கு போக்குவரத்து மிகவும் சிறந்த முறையில் நடைபெறுகின்றது. நிலத்துக்கடியிலான ரயில் சேவை மிகவும் வசதியும் விரைவானதுமாகும். பஸ் ஒவ்வொரு 15 நிமிடத்திற்கும் ஒவ்வொரு பஸ் உண்டு. கனடாவில் 100க்கு 70% ஆட்களிடம் கார் உண்டு. அநேகமான தமிழ் இளைஞர்களிடமும் கார் உண்டு. கனடாவில் தமிழன் வாழ்ந்தாலும் சொந்த நாட்டில் கஷ்டப்பட்டாலும் அங்கு வாழ்வதைத் தான் விரும்புவான். இது எப்பவும் அந்நிய நாடு. அரசாங்கம் என்ன என்ன சட்ட திருத்தம் கொண்டு வரும் என்று சொல்ல முடியாது. தற்போது பரவாயில்லை. இனி நடப்பதை யாரால் சொல்ல முடியும். கடவுள் ஒருவனால் தான் கணிக்க முடியும். வீட்டில் எல்லோருக்கும் என் அன்பு.

**அன்புள்ள அண்ணன்**

## அரிசி உப்புமா

(8ம்பக்கத் தொடர்ச்சி)

கரண்டி நல்லெண்ணெயையும், தேங்காய் துருவலையும் போட்டு கிளறி எடுக்கவும். எண்ணெய்க்குப் பதில் நெய் பயன்படுத்தலாம். கடலைப் பருப்பு இடலாமலும் செய்யலாம்.

—குணம்

## ஈழத்துப்புதுக்கவிதை

(4ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னோடியாக யாரை நாம் கருதலாம்? தமிழகத்துப் புதுக்கவிதையின் (எல்லா நாட்டுக்கும்) முன்னோடியாக இருந்தவர் கவிஞர் ந. பிச்சமூர்த்தி ஆவார். ஆனல் ஈழத்தில் புதுக் கவிதையின் முன்னோடியாகக் கருதப்படக் கூடியவர் யார்? அல்லது யாவர்??............

## துடிப்பு இழந்த

(5ம் பக்கத் தொடர்ச்சி)

கூட சோடியாக வாழுதுகள். தங்கள் பிள்ளைகளில் எவ்வளவு பாசம், ஒரு கோழிக் குஞ்சைப் பறிகொடுக்காமல் காக்க கோழி என்ன பாடு படும், எத்தனை குட்டியென்றாலும் ஒரு நாய்க் குட்டியைத் தூக்கும்போது எவ்வளவு பயப்படவேண்டும். அதுகளின் பாசத்தில துளிகூட இல்லாமல், மனுஷன் ஏன் அறிவுகூடியோ, கட்டியவளைக் கஷ்டப்படுத்தவிட்டு, அவளின்ரை உழைப்பில வீட்டிலிருப்பவங்கள், அதிலும் பொறுப்பில்லாமல் இருக்கிறவங்கள் என்ன செய்தாலும் என் ஆத்திரம் தீராது.

எத்தனை பொறுப்பில்லாத, குடிகார செல்வரட்ணங்களால, பாவம் எத்தனை ராஜேஸ் அக்காக்கள் அந்நிய நாடுகளில் அழுத கண்ணும், சிந்திய மூக்கும், நிம்மதியற்ற வாழ்வும் வாழுதுகளோ?

(யாவும் கற்பனை)

## எல்லாமே

(9 ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் எல்லாரும் கையால் விசிறிக்கொண்டு சாப்பிடுகிறார்கள் என்றார் மிகுந்த பெருமையுடன்.

சாப்பிட்டுக் கொண்டிருந்த அனைவரும் ஏககாலத்தில் முதலாளியைப் பார்த்து இங்கு ஒன்றும் சுடச்சுட இல்லை ஈக்கள்சாப்பிடவிடாமல் மொய்த்துக்கொண்டிருப்பதால் கையால் விரட்டிக் கொண்டு சாப்பிடுகிறோம் என்றார்கள்.

சாப்பிட வந்தவரைக் காணவில்லை.

—மதன்

## இலக்கியம்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

**விடைகள்:**

1. ரத (தேர்), கஜ(யானை), துரக (குதிரை), பதாதி (காலாட்கள்).
2. காம, குரோத, உலோப, மோக, மத, மாச்சரியம்.
3. குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல்.
4. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.
5. நாக்கு, கண். தோல், காது, மூக்கு.
6. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி,
7. பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்.
8. கோமேதகம், நீலம். பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைரம். வைடூரியம்.
9. சதுரகராதி.
10. சூடாமணி, திவாரகம்.
11. தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம்.
12. மச்ச, கூர்ம, வராக, இராம, பலராம, கிருஷ்ண, கல்கியாகும்.

**பூ. கவிதாம்பிகா,**
யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் ஆங்கிலபாடசாலை.

## தெரிந்து

(8ம் பக்கத் தொடர்ச்சி)

* தெங்கு ஆராய்ச்சி நிலையம் – லுணுவல்
* சிறகவரை ஆராய்ச்சி நிலையம் . பல்லேகல
* மண்வெட்டி தொழிற்சாலை-யக்கல

**கந்தையா முகுந்தன்**
டிறிபேக் சல்லூரி
சாவகச்சேரி

# கம்பன் காவியம்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

யில் விலங்கு என்றும் தன் தப்பிதமான செயலை நிறுவ வேண்டி ராமன் வாதிடுவது சாதாரண மானுடத்தின் இயல்பையே காட்டுகிறது. இதிலே தான் இழைத்த பிழையினைச் சரிசெய்யவே பின்னுல் இலங்கையில் இது போன்ற ஒரு சந்தர்ப்பம், வாலியின் நண்பனுன இராவணனுக்கு ஏற்பட்டபோது வெறுங்கையனுக நின்ற அவனைப் பார்த்து 'இன்று போய் நாளை வா' என்றமை சாதாரண மானுடத்திற்கு ஏற்படுகின்ற உளவியல் 'இட்டு நிரவல்' செயல்பாடேயாகும். இது கம்பன் படைத்த மானுடத்திற்குச் சிறப்பே தவிர வேறில்லை.

சீதையின் பிரிவால் ராமன் துவண்டு சோர்ந்திருக்கிறுன். இலங்கையிலே சீதையை அனுமன் கண்டான். சீதை 'ராமன் வீரம் விளைத்தே என்னை மீட்டுச் செல்லவேண்டும். என் சொல்லால் இலங்கையைச் சுடுவதைவிட ராமனின் வில்லால் படுவதே ராமனுக்கும் எல்லோருக்கும் சிறப்பு என்று பேசுகிறுள். யார் முன்னுல்? ராமன் மீது சிறந்த பக்தி கொண்டவனும், அதுவரை ராமனை ஒரு வீரனுகப் பார்த்ததைவிட சிறந்த அருளாளனுக மட்டுமே நினைந்து வாழ்ந்த அநுமன் முன்னுல் பேசுகிறுன். ஒரு நல்ல நடுநிலையாளனும் சிறந்த சொல்வளவனுமாகிய அநுமனையே கம்பன் தன் 'சொந்தக் கருத்தை' காப்பியத்தில் வெளிப்படுத்த பல இடங்களில் பயன்படுத்தினுன் என்பது காவியத்தை ஆய்பவர்களுக்கு இலகுவில் புரியும். ராமனிடம் மீண்டு வந்த அநுமன் பேசுவான், முதன்முதலாக ராமனை 'வீரன்' என்று அழைத்து அநுமன் சோர்ந்திருக்கின்றவனுக்கு அவனின் அப்போதைய கடமையை நினைவூட்டுவது மட்டுமல்லாது. ராமனது நினைவாலேயே அசோகவனம், சோகவனமாக மாற இருந்த சீதையின் சீரிய நெறியையும், ராமன் என்கிற மானுடத்துக்கு இயல்பாக எழுகின்ற சந்தேகத்திற்கு சற்றும் இடம் இல்லாதபடியும் சொல்லின் செல்வனுகிய அநுமன் தெளிவாக உரைப்பான்.

''விற்பெருந் தடந்தோள் வீர,
வீங்கு நீர் இலங்கைவெற்பின்
நற்பெருந் தவத்தகைய நங்
கையைக் கண்டேனல்லேன்,
இப்பிறப் பென்பதொன்றும்
இரும்பொறை என்பதொன்
றும்
கற்பெனப் பெயரதொன்றும்
களிநடம் புரியக்கண்டேன்'
என்பான்.

தகை சான்று சொற்காத்து சோர்விலாது நின்ற பெண்ணுகிய சீதையைக் காக்கவேண்டியது பெருந்தடந்தோள்வீரனே உனது வில் தான் என்ற கருத்தை அநுமன் நட்புரிமையுடன்சொன்ன பின்னரே ராமன் என்கிற காவிய நாயகன் சூழலும் காலமும் தெரிந்துசெயல்படத் தொடங்குகிறுன். இதுவும் ஒரு சிறந்தமானுடத்திற்கு உற்ற துணையாக வருகின்ற நட்பின் பெருமையை சித்திரிக்கின்றது. எப்பொழுதுமே பெண்மைக் கற்பின் பெருமையை காக்கவேண்டியது ஆண்மை வீரமே என்ற சீரிய கருத்தை மேற்படி பாடல் அழகுற விள்க்குகிறது. பின்னுல், இந்திரசித்தன் ஏவிய நாக பாசத்தால் இலக்குவன் முதலானேர் செயலற்று மூர்ச்சையுற்று இறந்தவர்கள் போலாயினர். இதனை அறிந்து கொண்ட ராமன், இலக்குவன் இறந்தே போயினன் என்று நினைந்துக் கொண்டு கதறித் துடிக்கிறுன். வழிநெடுக தன் நிழலாக வந்த தம்பி மாண்டு போயினனே என்ற நினைவே ராமனை கொல்லாமல் கொல்கிறது. ஏற்கனவே உற்ற மனையாளை இழந்த ராமன் உடன் பிறந்த பாசம் மிக்க தம்பியையும் இழந்த நிலையில் தற்கொலைக்கே தயாராகி விடுகிறுன். அழுது புலம்பி செயலற்றவனுகித் துடிக்கிறுன். இந்த இடம்தான் ராமன் மிகச் சாதாரண மானிடன்ஒருவனுக காணப்படுகின்ற இடம்; தான் தெய்வத்தன்மை நிறைந்தவன் ஓர் அவதார புருஷன் என்று காவியம் முழுக்க எவ்வாறு ராமனுக்கு தெரியவில்லையோ அப்படியே இந்த இடத்திலும் அவன் காணவில்லை. அவன் அறிந்ததெல்லாம் தான் ஒரு சிறந்த வீரன் அவ்வளவுதான். ஒரு வீரனுக்கு ஏற்படும் வாழ்வியல் சோதனைகள் தனக்கும் உண்டானதே என்கிற அளவில் மட்டும் நடந்துகொள்கிறுன். இந்நிலையிலே கருடாழ்வார் வருகிறுர். வருகின்ற கருடாழ்வாருக்கு ராமன் புலம்புவதும், கலங்கித் தவிப்பதும் வியப்பாக இருக்கிறது. இருக்கலாம் தானே! ஏனெனில் வைகுண்டத்தில் மட்டுமே இருந்துகொண்டு ராமனின் பூவுலக இயல்பு தெரியாத கருடாழ்வார் அவரை மகா விஷ்ணுவாக மட்டுமே காண்கிறுர், பாவிக்கிறுர். அவருக்கு இந்நிலை ஆச்சரியத்தை தருகிறது. 'எம்பெருமானே, வேதங்களுக்கு எட்டாதவனே! சாரங்க பாணியே, பாஞ்சசன்னியத்தை ஏந்தியவனே! 'கொல்' என்று சொன்னவனும் நீயே, கொலையுண்டு நின்றவனும் நீயே! கீதோபதேசம் செய்த தெய்வமே,உன்மாயை எனக்கு புரியவில்லையே'என்றபடி வருகிறுர்.

''சொல் ஒன்று உரைத்தி:
பொருளாதி தூய மறையுந்
துறந்து திரிவாய்
வில் ஒன்று எடுத்தி; சரம்
ஒன்று எடுத்தி; மீளிர்
சங்கம் அங்கை உடையாய்
கொல் என்று உரைத்தி:
கொலையுண்டு நின்னிகொடி
யோய் உன் மாயை அறியேன்
அல் என்று நிற்றி பிகலாதி
யாரிச்வ் அதிரேக மாயை
அறிவார்?''

இதனுள் எந்தவித மாற்றமும் ராமனில் ஏற்படவில்லை. தொடர்ந்தும் காவியம் முழுவதும் ஒரு சிறந்த மானுடனுகவே ராமன் காட்சி தருகிறுன். தொடர்ந்து செல்கிறுன்! இலக்குவனுதியோர் மீண்டெழுந்த போதும் சாதாரண மானுடன் மகிழ்வது போலவே அகமிக மகிழ்ந்து கருடாழ்வாரை போற்றுகிறுன்.

இப்படியாக சிறந்த ஒரு மானுடனுக வாழ்ந்த ராமனையும் அவனைப் பாட்டுடைத் தலைவனுகக் கொண்ட காப்பியத்தையும் மனித குணத்தை வழிப்படுத்த வந்த சிறந்த இலக்கியமாகக் கொள்ளாமல் வீணே, மதச்சார்பினை ஏற்றி காவியத்தின் சிறப்பிற்கும பயன்பாட்டுக்கும், கவிஞனுக்கும் இழுக்குத் தேடுவது இலக்கிய உலகிற்கு ஆரோக்கியமானதல்ல. எத்தனையோ நல்ல நூல்களை மதப்போர்வை போர்த்து யாருக்கும் பயன்படாது செய்த ஒர வஞ்சக புலமை உலகை நாம் வழி வழி கண்டதே. கம்பன் காவியத்தை வீணே மத நூலாக்காமல் அதனைப் பயின்று பழகி, பழக்கி வருபவர்களை ஏதோ வைஷ்ணவர்களோ என்று ஐயமளவு செய்யாமலும் மானுடத்தைநெறிப்படுத்த வழிப்படுத்த வந்தஒரு சீரியஇலக்கியமாககொள்வதே சமூகத்திற்கும் இலக்கிய உலகிற்கும் நல்லதாகும். இதனுல் தான் ஒரு சாதாரண பாமரனுக காவியத்தில் காட்சி தருகின்ற கிட்கிந்தைத் தலைவன் சுக்கிரீவன், ரமலட்சுமணனுக சண்டு கொண்ட மாத்திரத்திலேயே உள்ளார்ந்தெழுந்த உணர்வுடன் 'மானுடம் வென்றதம்மா' என்று கூறி மகிழ்கிறுன். காப்பியந்தைப் படைத்த கம்பனின் கருத்தும் இதுவேயாகும்.

## ஆங்கிலமும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சொற்பொருளியல் ஆய்வாளர்கள் பெருமளவு ஆங்கிலச் சொற்களில் தமிழ்ச் சொற்களின் வேர் பொருள் என்பன பெருமாற்றமின்றி விரவிக் கிடப்பதாகக் கூறியுள்ளனர். இது வியப்பூட்டும் செய்தியன்று. லெமூரியாக் கண்டத்து முதன் மாந்தன். நிலப்பெயர்வு, கடல்கோள் முதலியன காரணமாக குடிபெயர்ந்து நாற்றிசையும் சென்ற தொன்ம வரலாற்றை நோக்கும் போது பிறமொழிச் சொற்களில் தமிழின் கூறுகள் பரந்து காணப்படுவது புதுமையன்று இயல்பேயாம்.

இத்துறையில் புலமையில்லாதோர்கூட எளிதில் கண்டு தெளியக்கூடிய சில ஒப்புமைகள் உள்ளன. அவற்றில் சில இங்கு குறிப்பிடப்படுகின்றன. இவற்றை மூன்று தலைப்புகளில் வகைப்படுத்துவோம். அண்மைக் காலத்தில் ஆங்கிலம் ஏற்றுள்ள தமிழ்ச்சொற்களுள் சில இங்கு காட்டப்பட்டுள்ளன. இவற்றின் வேர், ஒலி, பொருள் ஆகியவற்றில் பெருமாற்றம் இல்லை.

1. பந்தல் – Pandal, மிளகு தண்ணி – Mulligatowny.

ஒரே வேர், ஒரே பொருள் உடையனவும், சற்றே ஒலிச் சிதைவுற்றனவும்:

2. ஒன்று-One, எட்டு-Eight, குளிர் - Cool, கொல் - Kill, சாத்து - Shut, கண்டி - Condemn, பரல் - Pearl, பாராளுமன்றம் - Parliament, தோகை – Toga.

3. ஆங்கில நெடுங்கணக்கில் இன்றுள்ள எழுத்துக்கள் அனைத்தும் தொடக்கத்தில் இருந்ததில்லை. இன்றுள்ளவற்றின் இடையிலுள்ள சிலவும், இறுதியில் உள்ள பலவும் பின்னுளில் சேர்க்கப்பட்டவை. இவ்வாறு புதிய ஒலிக்குறியீடுகள் சேர்க்கப்படுமுன், பல சொற்களின் ஒலியமைப்பு இன்றுள்ளதிலும் வேறுகவேயிருந்தன. இந்த உண்மையின் அடிப்படையில் நோக்கும் போது ஏராளமான தமிழ்ச் சொற்கள் வேர், ஒலி, பொருள் ஆகியவற்றுல் ஆங்கிலச் சொற்களில் இரண்டறக் கலந்துள்ளமை தெளிவாகும். இத்தகைய சொற்களே ஆங்கிலத்தில் மிகுதி. இவற்றை இனங்காண்பதற்கு சொற்பிறப்பியலிலும்பார்க்க சொற்பொருளியலில் ஆழ்ந்த புலமை வேண்டப்படும். இத்தகைய சொற்களுள்நெருங்கியவெளிப்படையான தொடர்புடையன சில.

களி, களிப்பு- Clay, Glad. கிழான், கிழார் - Clergy. கிளம்பு, கிளர்ச்சி - Climb, Climax, கிளார் – Glare. குழு, குழாம்- Guild, திருகு- Torgue. துறந்த நிலை- Transcendental, தக்கன்- Technician.

### உண்மையை உலகறியச்செய்க

மொழி மாந்தன் படைப்பு; அவனைப்போன்றே அதற்கும் வளர்ச்சியுண்டு. வளர்ச்சியின் போது மாற்றங்களேற்படுவதைத் தவிர்த்தலியலாது. இதற்கமைய ஒலிச் சிதைவு, சொற்சிதைவு, பொருள் திரிபு என்பன ஏற்படும். எனினும் ஒரு சொல்லின் வேர், அதுகுறிக்கும் பொருள் என்பன மாற்றமடைவதில்லை. மற்றைய மொழிகளில் விரைவியுள்ளமை போன்றே, ஆங்கிலத்திலும் ஆயிரக்கணக்கான தமிழ்ச் சொற்கள் கரந்து பயின்று வருகின்றன. சொற்பொருளியல் வல்லுநர்கள் இதனை எளிதில்காண்பர். தமிழ் மூத்த மொழி என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. பிற மொழிகள்பிறப்பதற்கு தமிழே நிலைக்களன் என்பதை, தொன்மைக் காலத்து, லெமூரியாக் கண்ட வரலாறு தெளிவுபடுத்துகிறது. ஆகவே ஆங்கில மொழியில் தமிழின் கூறு எத்துணை என வரையறுக்கவும் தமிழின் தொன்மையை நன்கு வெளிப்படுத்தவும் இத்துறையின் செம்மையான ஆய்வு தொடர்தல் இன்றியமையாதது.

## வானொலி நாடகம்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவு செய்து, அவை ஒவ்வொன்றிலும் முந்நூறு பிரதிகள் வாங்கி, பாடசாலைகளுக்கும் உள்ளூராட்சி சபைகளின் கீழ் இயங்கும் நூல் நிலையங்களுக்கும் வழங்கத் திட்டமிட்டிருப்பதாக அதன் கல்வி, கலாசார செயலாளர் ஜே. சற்குணராசா அவர்கள் கூறியிருக்கிறுர். யாழ்ப்பாணப்பகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திவகலாலா அவர்கள் ஈழத்து எழுத்தாளர்களது நூல்கள் ஒவ்வொன்றிலும் நூறு நூறு பிரதிகள் வாங்கி உள்ளூராட்சி சபை நூல் நிலையங்களுக்கு வழங்கியிருக்கிறுர். இன்னும் நூறு நூறு பிரதிகள் வாங்குவார் என்று எதிர்பார்த்திருக்கிறேம். இந்து சமய கலாசார தமிழ்மொழி அமைச்சர் பி.பி. தேவராஜ் அவர்கள் ஈழத்தில் வெளியிடப்பட்ட ஒவ்வொரு நூலிலும் ஐம்பது பிரதிகள் வாங்கப்போவதாகக் கொழும்பில் ஒரு கூட்டத்தில் கூறியிருக்கிறுர். அதுமட்டுமல்லாமல் சுமார் பத்து ஆண்டுகளாக வழங்கப்படாதிருந்த சாகித்திய மண்டலப் பரிசை ஈழத்து எழுத்தாளர்களதுநூல்களுக்கு வழங்கப்போவதாகவும் அறிவித்திருக்கிறுர். சுதந்திர இலங்கையில் ஈழத்து எழுத்தாளர்கள் தங்கள் நூல்களை வெளியிடுவதற்கு இதைவிட உகந்த சூழ்நிலை என்றுமே இருந்ததில்லை, எனவே எழுத்தாளர்களே சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். உங்கள் நாடகங்களை- எல்லாவகை நாடகங்களையும் நூலுருவில் கொண்டுவந்து, தமிழ் நாடகத்துறை செழித்து வளர உதவுவீர்கள் என்று தமிழ்கூறும் நல்லுலகம் எதிர் பார்த்து நிற்கின்றது.

(முற்றும்)

## இணுவில்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

முக விநாயகர் அத்தேரினில் ஆரோகரித்து அடியார்கள் அரோஹரா, அரோஹரா என பக்தி மேலீட்டினுல் ஆர்ப்பரித்து பக்திப்பரவசமாய் வடம்பிடித்திழுகக ஆடவரும், பெண்டிரும், இளைஞர்கள், குழந்தைகளும் ஆனந்தக்கண்ணீர் சொரிய அங்கப்பிரதிஷ்டை செய்பவர்கள்பின்னே வர, மங்கல மணி வாத்திய ஒலிகளுடன் ஆடி, அசைந்து, அசைந்து இரதம் ஊர்ந்து வரும் காட்சியைக்காணக் கண்கோடி வேண்டும். மாலை நேரம் பச்சை நிற வஸ்திரம் அணிந்து உயரிய பூஜைகளை ஏற்று ஊஞ்சலாடி பின் நடனமாடி விநாயகர்வரும் காட்சி சொல்லுந் தரமன்று.

சீரிணுவைத் சிறக்கவைக்க பார்தனிலே பரராசசேகரன்
துதித்திட்ட சிற்பரனும் விநாயகனின்
சித்திரத் தேர்ப்பவனி காணவாரீரோ!

நாதன்
அன்பிரதர்

பலசரக்கு மாளிகை
இல. 2, கே. கே. எஸ். வீதி,
சுன்னுகம்.

இணுவை விநாயகனின்
திருவடி நிழல்காண வந்திடுவீர்.

V
ஞானேஸ்வரன்
அரிசி ஆலை

பிள்ளையார் கோவிலடி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

# ஆனைவிழுந்தான் குடியேற்றத்திட்டத்திற்கு கிளி. அரச அதிபர் விஜயம்

(கிளிநொச்சி)

ஆனைவிழுந்தான் அகதிகள் குடியேற்றத் திட்டத்திற்கும் ஆனைவிழுந்தான் பாரிய குள அமைப்பு வேலைகள் நடைபெறும் இடத்திற்கும் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி பவானி ஸ்ரீஸ்கந்தராசா மற்றும் அதிகாரிகள் விஜயம் செய்தனர்.

சுமார் அறுபது லட்சம் ரூபா செலவில் ஆனைவிழுந்தான் குளம் நிர்மாணிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இக்குள வேலைகள் நடைபெறும் இடத்தில் உள்ள 35 அகதிகள் குடியேற்ற வாசிகளுக்கும் மாற்றுக் காணி வழங்கப்படும் என அரச அதிபர் தெரிவித்தார்.

நடமாடும் செயலக ஓரங்கமாக மண்ணியன் குளத்திற்கு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி பவானி ஸ்ரீஸ்கந்தராசா விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசுதிணைக்கள தொடர்பு இணைப்பாளர் திரு. சிவபாதம் ஆகியோர் விஜயம் செய்து இப்பகுதியில் பெருவாரியாக உள்ள பனையை மூலதனமாக கொண்டு சுய தொழில் வேலைவாய்ப்பு ஆரம்பிப்பது தொடர்பாக ஆலோசனை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மாவட்டத்தின் இரண்டாவது நடமாடும் செயலகம் பூநகரி உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள பின்தங்கியகிராம சேவையாளர் பிரிவில் நடைபெறும் என அரசாங்க அதிபர் மாணிக்கவாசகர் தெரிவித்தார். (83)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை வெல்வில் சுப்பிரமணியசுவாமி கோவில் கொடியேற்றம் இன்று 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இதனைத்தொடர்ந்து பதினொரு நாட்கள் உற்சவம் நடைபெற்று அடுத்த மாதம் 5ம் திகதி தேர்த்திருவிழாவும் 6ம் திகதி தீர்த்தோற்சவம் இடம்பெறும். (152)

## கைதடியில் அறவழி சிறுவர் மாநாடு

(யாழ்ப்பாணம்)

அறவழி சிறுவர் நட்புறவு மாநாடு, ஆகஸ்ட் மாதம் 25, 26ம்திகதிகளில் கைதடிநவீல்ட் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

கருத்தரங்கு, கலாசார நிகழ்ச்சிகள் இம்மாநாட்டில் நடைபெறவுள்ளதுடன் திருமதி ராஜி சண்முகநாதன் எழுதிய சிறுவர் இலக்கிய கவிதைத் தொகுதி வெளியீட்டு விழாவும் இடம்பெறவுள்ளது.

இம்மாநாட்டில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மாவட்டத்திலிருந்து 150 சிறுவர்கள் பங்குபற்றவுள்ளார்கள்.

## சாவகச்சேரியில் பிரஞ்சு மருத்துவ நிபுணர்கள்

(மட்டுவில்)

பிரஞ்சு நாட்டைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்கள் அண்மையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்தனர்.

இவர்களை தென்மராட்சி நோயாளர் நலன்புரிச் சங்கமும், வைத்திய அதிகாரிகளும் சந்தித்து உரையாடினர்.

தென்மராட்சிப் பகுதி நோயாளர்களின் நலன்பேணி சாவகச்சேரியிலும், சிறிய அறுவைச்சிகிச்சைகளை வாரத்தில் இரு தடவைகளாவது நடத்த முன்வரவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

இக் கோரிக்கை சம்பந்தமாகத் தாங்கள் கொழும்புடன் தொடர்பு கொள்வதாகவும், இதன் பின்னர் பதில் கூறுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர் (82)


**ஹரன்**

சினிமா

தினசரி 4-00, 6-45. 9.30

சனி, ஞாயிறு நாட்களில்

10-30, 2-30 6-30, 9.30

ஜெய்சங்கர்-K R. விஜயா நாகேஸ் சுருளி நடித்த

**திருடி**


## மின் தடை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் யாழ்ப்பாணம் பகுதியில் பாரிய மின் மார்க்கத்தில் அவசிய திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவிருப்பதால் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை எட்டு மணி முதல் மாலை ஐந்து மணிவரை கீழ்க்குறிப்பிடும் பகுதிகளின் மின்சாரம் தடைப்படும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

அராலி வீதி, கண்ணுபுரம், பண்ணை, குருநகர், கொன்வென்ற், மண்டைதீவு, நல்லூர், கனகரத்தினம் வீதி, அரியாலை, உப்புக்குளம், புங்கங்குளம், பாஷையூர் ஆகிய பகுதிகளில் மின்தடை ஏற்படும்.

# இவ்வாரம் உங்கள் பலன்

இ. மகாதேவா

(27-5-90 — 2-6-90)

**மேடம்:**

சமூகசேவையில் குறை குற்றங்கள் கேட்பீர்கள். அன்னியர்களின் உதவிகளால்நன்மை ஏற்படும், பொருட் செலவு அதிகரிக்கும், அடிக்கடி பதட்டமான நிலை ஏற்படும்.

**இடபம்:**

தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும், பெண்களின் உதவிகளால் சில காரியங்களில் அனுகூலமான பலன் கிடைக்கும், இரகசியங்களைக் காப்பாற்றவும், இனஜனங்களால் வீண்பழி உங்கள் மீது சுமத்தப்படும்.

**மிதுனம்:**

பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும், ஆனுல் மனம் அடிக்கடி சலனப்பட்டபடி இருக்கும் கொடுக்கல் வாங்கலில் பிரச்சனைகள் ஏற்படும். சகோதரங்களின் காரியங்களுக்காக ஓடியாடித்திரிவீர்கள்.

**கடகம்:**

பொருட்செலவு அதிகரிக்கும், சிலருடன் வீணுக வாக்குவாதப்பட்டு வேதனைப்படுவீர்கள், பிரயாணமொன்று காத்திருக்கிறது, குடும்பத்துக்கு முன்னேற்றம் ஏற்படும்.

**சிங்கம்**

உடல் நிலையில் பாதிப்பு ஏற்படும். சகோதரங்களுடன் பிரச்சனைப்படுவீர்கள் தூரத்துச் செய்திகளால் ஓரளவு நற்பலன்கள் ஏற்படும், திடீர் கோபத்தால் சிலருடன் பகைத்து வேதனைப்படுவீர்கள்.

**கன்னி**

வீட்டுத் திருத்தங்களுக்கு திட்டமிடுவீர்கள், சகோதரங்களின் காரியங்களுக்காக அலைச்சல் ஏற்படும், மறைமுக எதிரிகளால் தொல்லைகள் உண்டு, பிரிவுகள் ஏற்படும் புதிய திட்டங்களால் முன்னேற்றம் ஏற்படும்.

**துலாம்**

சகோதரத்தாலும் பிள்ளைகளாலும் வீண் மனக்குறைகள் ஏற்படும், திட்டமிட்டுச் செயற்படுவதால் வீண் அலைச்சல் ஏற்படாது. தொழில் ஸ்தானத்தில் நல்ல வரவேற்பு இருக்கும், பணவரவு சுமாராக இருக்கும்.

**விருச்சிகம்:**

செல்வாக்கால் செல்வாக்கு ஏற்படும், சகோதரர்களால் உதவிகள் உண்டு. பொருள் விஷயங்களில் அவதானமாக இருக்கவும், கூடியிருந்து தொலலைதரும் நண்பர்களை நம்ப வேண்டாம், குடும்ப மகிழ்ச்சி ஏற்படும், சமூக சேவையால் புகழ்பரவும்.

**தனுசு-**

திட்டமிட்ட அலுவல்கள்நடக்காது குடும்ப விவகாரங்களால் சகோதரங்களுடன் மனக்கருத்து ஏற்படும், பெரியவர்கள் உதவி செய்வார்கள் பல், வயிறு ரோகங்கள் வரும், சகோதரங்களின் சுபமங்கள காரியங்களுக்காக ஓடியாடிப் பேச்சுக்கள் செய்வீர்கள்.

**மகரம்**

மனநின்மதி ஏற்படாது சிலகாரியங்கள் தடைப்படும் தூரத்துச் செய்திகள் வரும், வீட்டில் கலகலப்பான காரியங்கள் நடைபெறும். தொழில் ஸ்தாபனத்தில் விரும்பத்தகாத சம்பவங்கள் நடக்கும்.

**கும்பம்:**

பெண்களால் தொல்லைகள் ஏற்படும், சகோதரங்கள் சிறப்படைவார்கள், உஷ்ண வியாதிகள், ஏற்படும், விஷ பீடை, அக்கினிப்பயம்உண்டு. பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

**மீனம்:**

பொருட்செலவுகள் அதிகரிக்கும், அரச பயம் மிகும், உங்கள் செல்வாக்கால் பல காரியங்களைச் சகித்துக் கொள்ளுவீர்கள், வீடுமனைச்சிறப்பு ஏற்படும், தொழில் ஸ்தாபனத்தில் எதிர்பாரத பிரச்சனைகள் ஏற்பட்டு மன நின்மதியை இழக்கச் செய்யும்.

# கூட்டுறவு பயிற்சி வகுப்பு ஆகஸ்டில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுப் பணியாளர் சான்றிதழ் உயர்தரப் பயிற்சி (முகாமைத்துவ மட்டத்திலானது) யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையினுல் இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் 1ம் திகதி ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

கூட்டுறவுப் பணியாளர் சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்தபின்னர் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து சேவை செய்தவர்களும் கூட்டுறவு பணியாளர் சாதாரணத் தராதரதப் பரீட்சையில் முதலாவது தரத்தில் சித்தி யெய்திய பின்னர் ஓராண்டு காலம் தொடர்ந்து சேவை செய்தவர்களும் பல்கலைக்கழக பட்டதாரி, கனிஷ்ட பல்கலைக்கழக டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருந்தாலும் ஓராண்டு காலம் தொடர்ந்து சேவை செய்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

வெளிவாரி விண்ணப்பதாரிகள் க. பொ. த (சாதாரணம்) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலை தராதரப் பரீட்சையில் எண்கணிதம் வர்த்தக கணிதம், கணிதம், கணக்கி

(14-ம் பக்கம் பார்க்க)

# இடியின் எதிரொலி: மின்சாதனங்கள் சேதம்

(மானிப்பாய்)

கொழும்புத்துறையில் இடி விழுந்ததினுல், அப்பகுதி மக்களின் மின்சாதனங்கள் பழுதடைந்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்மாதம் 23ம் திகதி இரவு பலத்த காற்று, மழையுடன் இடிமுழக்கமும் ஏற்பட்டது.

கொழும்புத்துறை முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள வீட்டித் தென்னை மரம் மீது இடி விழுந்தது. இதனைத்தொடர்ந்து அப்பகுதியில் இயங்கிக்கொண்டிருந்த தொலைக்காட்சி, வானொலி மற்றும் குளிர்சாதனப் பெட்டிகள், மின் அடுப்புகள் பழுதடைந்து விட்டதாகவும் இதனுல் பலத்த நஷ்டம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (71)

## உற்சவம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் களபூமி பாலாவோடை குறிஞ்சாக்குளி அருள்மிகு முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 29ம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி யூன் மாதம் 6ம் திகதி தேர்த்திருவிழாவும் 7ம் திகதி தீர்த்தத் திருவிழாவும். 8ம் திகதி பூங்காவனத்திருவிழாவும் நடைபெறவுள்ளது.

## போக்குவரத்து கஷ்டம்

(வேலணை)

புங்குடுதீவில் உள்ள இறுப்பிட்டி துறைமுகத்திற்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகளின்றி மக்கள் மிகுந்த கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து இறுப்பிட்டிக்குப் போகவேண்டுமானுல் தனியார் பஸ்சில் ஏறி புங்குடுதீவு பெருங்காட்டுச் சந்தியில் இறங்கி அங்கிருந்து மூன்று மைல் தூரம் நடந்து செல்லவேண்டிய அவல நிலை இருந்துவருகின்றது. (75)

# "மாணவர்களுக்கு ஆங்கிலக்கல்வி மிக முக்கியமானது"

(தென்மராட்சி)

"சர்வதேசமொழியான ஆங்கிலக்கல்வி மாணவர்களுக்கு இன்று மிக முக்கியமானது. தற்போது ஆங்கிலத்தில் வளர்ச்சி பாடசாலைகளில் குன்றி வருகிறது. இதை உணர்ந்து ஆங்கிலத்தை பாடசாலைகளில் வளர்க்க அமைச்சு முன்வந்துள்ளது."

சாவகச்சேரி வடக்கு இந்துக் கல்லூரியின் ஆரம்ப பாடசாலையில் ஆங்கில தினவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் கல்வி அதிகாரி திரு. எஸ். வி. மகேசவேலு இவ்வாறு கூறினுர்.

பாடசாலை அதிபர் வ. கைலேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற விழாவில் திரு. மகேசவேலு மேலும் பேசும்போது, தற்போது ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஆண்டு 4ல் இருந்து போதிக்கப்பட்டு வருகிறது இன்னும் கீழ் மட்டந்திலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்படுவதால் நல்லபலனையடையலாம். என்றுர்.

ஆங்கில ஆரம்ப வகுப்புக்கள் தரமான ஆசிரியர்களால் போதிக்கப்படல் வேண்டும் தக்க அனுபவம் தராதரம் உடையவர்கள் ஆங்கிலத்தை ஆரம்பத்தில் கற்பிக்கவேண்டும்.

கொத்தணி அதிபர் திரு. க. சி. குகதாசன் பேசும்போது ஆங்கிலம் சர்வதேச மொழி தமிழ் மாணவர்க்கு தமிழ் தாய்மொழி அவசியம். அதுபோல சர்வதேச மொழியான ஆங்கிலமும் அவசியம். எங்கள் பிள்ளைகளுக்கு தமிழ் தாய்ப் பால்; ஆங்கிலம் புட்டிப்பால் எனவே பிள்ளைகளின் வளர்ச்சிக்கு தாய்ப்பாலும் புட்டிப் பாலும்அவசியம் என்றுர், (81)

## கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

போரூட் கிராமியஅபிவிருத்தித்திட்டத்தின் தயாரிப்புக்களின் கண்காட்சியும் மலிவு விற்பனையும் தாழையடி போரூட் நிலையத்தில் கடந்த 21-ம் திகதி ஆரம்பித்தது. நாளை 28ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

சிறுவர் பெரியவர்கள் உடுப்புக்கள், துஷ்சி வதிரி பாதணி உற்பத்திகள். பன்னவேலை அலங்காரப் பொருள்கள் பல தயாரிப்பு பொருள்கள் இக் கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்படும்.

தாழையடி பங்குத் தந்தை வணபிதா ஜோ மரிய செபஸ்ரியன் இந்தக்கண் காட்சியையும், விற்பனை நிலையத்தையும் திறந்து வைத்தார்.

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

நவீன ஈஸ்வரி சிறுவர் பாடசாலை வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் மாவிட்டபுரம் வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கிராம சேவையாளர் திரு. கே. கலியுகவரதன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்வைபவத்திற்கு இலங்கை சீமெந்துக்கூட்டுத்தாபன நிர்வாக முகாமையாளர் வி. ரி. சிவலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறுர். திருமதி நளாயினி சிவலிங்கம் பரிசில்கள் வழங்குவார்.

## சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

லங்கா சீமெந்து நிறுவன கலை இலக்கிய முதலாவது ஆண்டு விழாவும் சஞ்சிகை வெளியீடும் இன்று 27ம் திகதி ஞாயிறு பிற்பகல் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக லங்கா சீமெந்து ஆலை முகாமையாளர் திரு. ம. ஜனநாயகம் கலந்துகொள்கிறுர். அத்துடன் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன் கலந்துகொள்கிறுர்.

"சங்கமம்" என்னும் காலாண்டுச் சஞ்சிகையும் இவ்விழாவில் வெளியிடப்படும்.

இவ்விழாவில்விவாத அரங்கு, நாடகம் ஆகியவையும் நடைபெறும். (153)

# விவசாய அபிவிருத்திக்கு 18 கோடி ரூபா நிதி உதவி

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களினதும், அதன் எல்லைப்புற மாவட்டங்களினதும் விவசாய அபிவிருத்தித் திட்டங்களுக்கு சுவிஸ் நிறுவனமும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் இணைந்து 18 கோடி ரூபா நிதி உதவி வழங்கியுள்ளன.

இதற்கான ஒப்பந்தத்தில் சுவிஸ் அரசின் சார்பில் தூதுவர் திரு ஹென்றி கெனற்றும் இலங்கையின் சார்பில் திரு. ஆர். பாஸ்கரலிங்கமும் கைச்சாத்திட்டனர்.

விவசாயிகளுக்கு கடன்வசதி புனர்வாழ்வு பெறும் வசதிகள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலும், அதன் எல்லைப்புற மாவட்டங்களான அநுராதபுரம், பொலநறுவை, புத்தளம் ஹம்பாந்தோட்டை மொனருகலை ஆகிய பகுதிகளில் இத்திட்டம் அமுல் செய்யப்படவுள்ளது. (அ)

## இன்று

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை இந்துக் கலலூரி முறைசாராக்கல்விப் பிரிவின் 1989ம் ஆண்டு உடையமைத்தல் பயிற்சி நெறியின் தையற் டொருட்காட்சியும் பொருள் விற்பனையும் இன்று 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வட்டு இந்துக் கல்லூரி வள்ளியம்மை மண்டபதில் கொத்தணி அதிபர் சி. டாஸ்தலைமையில் நடைபெறவுள்ளது. (159

★ ★

(வட்டுக்கோட்டை)

காரைநகர் வியாவில் சைவ வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி இன்று 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காரைநகர் கருங்காலி முருகமூர்த்தி கோவில் வீதியில் வித்தியாலய அதிபர் கு. கதிரவேலு தலைமையில் நடைபெறவுள்ளது.

## வடக்கு கிழக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளதாகவும் அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கு பகுதி விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டிலிருப்பதை வன்மையாக கண்டித்து வரும் இக்கட்சி இப்பகுதியை மீண்டும் அரசு கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டுமென கோரி வருகிறது.

மேலும் அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான பேச்சுக்களை குழப்பும் விதத்திலும், புலிகளுக்கு எதிரான பிரசாரத்திலும் அது ஈடுபட்டு வருவதாகவும் அந்த அவதானிகள் தெரிவித்துள்ளனர். (சி)

## யாழ். மாவட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கவேண்டுமென்று அரசாங்கம் கேட்டிருப்பதாக தெரியவருகிறது.

கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் அறிவுறுத்தலின்பேரில் மாகாணத் திட்டமிடல் ஆணைக்குழு இதனை தயாரித்து வருகிறது.

மாவட்டத்தில் அமையவுள்ள இத்திட்டமானது பொது தனியார் துறைகளை உள்ளடக்கி மாவட்டம் பெறக்கூடிய பௌதிக—மனித — நிதிவளங்களை அடிப்படையாகக் கொண்டு இருத்தல் வேண்டும்.

ஆகவே யாழ். மாவட்டத்திலுள்ள திணைக்களங்கள் 1990—1994ஆம் ஆண்டு வரைக்கான காலப் பகுதியில் இம்மாவட்டத்தில் தங்களால் மேற்கொள்ளக்கூடிய பொருளாதாரத்திட்டத்தினை தயாரித்தல்வேண்டும். (153)

## உங்களது


(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்; ''எங்களால் பிடிக்கப்பட்ட மாற்று இயக்கத்தவர்களை கட்டம் கட்டமாக பெற்றோரிடம் ஒப்படைத்து வருகிறோம். இவர்கள் மாற்று இயக்கத்தவர்களின் கட்டாய இராணுவப் பயிற்சி பெற்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது''

''இவர்களை இந்தப் போராட்ட காலத்தில் விடுவிக்கிறோம். இவர்களை கைது செய்தபோது அந்நிய இராணுவ, தேசத்துரோகிகளின் உந்துதலில் இருந்தவர்கள் இவர்களை எல்லாம் கொஞ்சக் காலம் நாம் வைத்திருந்து நல்ல ஒழுக்கமுள்ளவர்களாக, சீர்திருத்தவாதிகளாக, பூரணத்துவமடைந்தவர்களாக பெற்றோர்களாகிய உங்களிடம் ஒப்படைக்கிறோம். எதிர்காலததில் சமுதாயத்துக்கு பயன்படக்கூடிய மனிதர்களாக ஆக்கும் பொறுப்பு உங்களிடம் இருக்கிறது.

நாம் இன்று விடுதலை செய்வோர் சார்ந்திருந்த இயக்கத்தைச் சேர்ந்த தலைவர்கள் ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை செய்கிறார்கள். இந்த நேரத்தில் இவர்களை நாம் விடுதலை செய்யக்கூடாது அப்படியிருந்தும் அதைப் பொருட்படுததாது மனிதாபிமானத்துடன் விடுதலை செய்கின்றோம்'' என்றார். (152)



பிரிட்டிஷ் தூதுவர் திரு. டேவிட் கிளாட்ஸ்ரன் யாழ். பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் யாழ். மருத்துவ சங்கத்தின் 8வது வருடாந்த கூட்டத்தை குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார்.

## தேசியக் கொடி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பறக்கவிடப்பட வேண்டும் என்று பொது நிருவாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சு பணிப்புரை வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. (121)

## றேவின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படவேண்டிய விடயமென்றும் விசாரணை நடாததுவது பற்றி மத்திய அரசுக்கு தெரியுமென்றும் திரு. சிங் கூறியுள்ளார்.

எனினும் பிரதமரின் இக் கண்டனம் குறித்து முதல்வர் திரு. கருணாநிதி அதிருப்தி அடைந்துள்ளதுடன், இவ் விவகாரத்தில் மாற்று நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளலாமென எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

''பிரதமர் சிங் முதல்வரின் குற்றச்சாட்டை அலட்சியப் படுத்தியதுடன் ஜனநாயக நாட்டில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு முதல்வரின் நியாயமான, பிரதானமான குற்றச்சாட்டை அரசு அலட்சியப்படுத்தியுள்ளது நாட்டின் எதிர்காலத்திற்கு நல்லதல்ல'' வென 'ஆனந்த விகடன்' சஞ்சிகை குற்றம் சாட்டியுள்ளது. (சி)

## கூட்டுறவு

(13-ம் பக்கத்தொடர்ச்சி)

யல் கணக்குப் பதிவு ஆகியவற்றில் ஒன்றுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்று க. பொ. த உயர்தரப் பரீட்சையில் நான்கு பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பம் முடிவு திகதி இம்மாதம் 28 ம் திகதியாகும்.

## ஜே. வி. பி

(1ம் பக்கத் தொடர்ச்சி

கப்பட்டதற்கான அல்லது விடுதலை செய்யப்பட்டதற்கான ஆதாரமோ இல்லைஎன சுதந்திர கட்சி எம். பி. திரு. மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அமைச்சர் திரு: ரஞ்சன் விஜயரத்ன இது தொடர்பாக பொலிஸ் மா அதிபரை தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## தமிழர்கள்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

குற்றம் சாட்டியுள்ளார்.

இதுபற்றி திரு. ரஞ்சன் மேலும் தெரிவிக்கையில்; தமிழர் பிரச்சினை குறித்து தற்போதைய பேச்சுக்கள்தொடர்பாக அமைச்சர் ஹமீத்துடன் ஆராய்ந்துள்ளேன் ஜனாதிபதியுடனும் தனித்தனியாக ஆராய்ந்துள்ளோம். அவர் தமது வழியில் செல்கிறார். நான் எனது வழியில் செல்கிறேன் எமக்கிடையே மோதல் எதுவுமில்லை என்றும் குறிப்பிட்டார். (சி)

# ஆலய கிணற்றில் ஆணின் சடலம்

(மட்டுவில்)

இனம் தெரியாத ஆணின் சடலம் ஒன்று மட்டுவில் தெற்கு (சாந்திபுரம்) செல்வ விநாயகர் ஆலய வெளிப்புறக் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

சுமார் 60 வயது மதிக்கத்தக்க இந்த ஆணின் சடலத்துடன் ஒரு பயணப்பையும் கிணற்றிற்கு அருகாமையில் இருக்கக் காணப்பட்டது.

சடலத்தின் கையில் கைக்கடிகாரம் ஒன்றும் இருக்கக் காணப்பட்டது.

இச்சடலம் இதுவரை உரிமைகோரப்படாததால்தற்போது சாவகச்சேரி ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. கண்டெடுக்கப்பட்டபொருட்களும் ஆஸ்பத்திரி நிர்வாகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (82)

# தேயிலைத் தூளைச் சாப்பிட்ட 9 மாதக் குழந்தை பலி

(யாழ்ப்பாணம்)

தேயிலைத்தூளை சாப்பிட்ட 9 மாதப் பெண் குழந்தை ஒன்று மூச்சுத்திணறி மரணமானது.

கொழும்புத்துறை மணியந்தோட்டத்தில் நேற்று இடம் பெற்ற இச்சம்பவத்தில் பொபி சாளினி சிவலிங்கம் என்ற 9மாதக்குழந்தையே இவ்வாறு மரணமானதாகும்.

இம்மரணம் தொடர்பான விசாரணையின்போது சாட்சியமளித்த குழந்தையின் தாயார் கூறுகையில்; குழந்தை தேயிலை தூளை அள்ளி சாப்பிடும்போது வாய்நிறைந்து மூச்சுத்திணறுவதாக மகன் சொன்னதைக் கேட்டு ஓடிச்சென்று பார்த்து குழந்தையின் வாயிலிருந்த தேயிலைத்தூளை கைவைத்து வெளியெடுத்தும் குழந்தை சோர்வதைக் கண்டு உடன் யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுசென்று டாக்டரிடம் காட்டியபோது குழந்தை இறந்துவிட்டதாக டாக்டர் தெரிவித்ததாகவும் கூறினார்.

மரணவிசாரணையை யாழ். திடீர் மரணவிசாரணை அதிகாரி எஸ். எஸ். பிரான்ஸிஸ் மேற்கொண்டார். யாழ். ஆஸ்பத்திரி பொலிஸ் பகுதி பொலிஸ் உத்தியோகத்தர் செ. லோகநாதன் சாட்சிகளை நெறிப்படுத்தினர்.

விசாரணை முடிவில் மூச்சுத் திணறியதால் ஏற்பட்ட மரணம் எனத்தீர்ப்பளிக்கப்பட்டு சடலம் பெற்றோரிடம் ஒர் படைக்கப்பட்டது. (56)

# விமான ஜன்னல் உடைந்து

## வீசப்பட்டவர் உயிர்பிழைத்தார்

(நியூயோர்க்)

அமெரிக்காவில் விமான பயணம் மேற்கொண்டிருந்த பயணி ஒருவருக்கு அருகே அமைந்திருந்த யன்னல் உடைந்ததினால் வெளியே தூக்கி வீசப்பட இருந்தபோதிலும், அவர் தெய்வாதீனமாக காப்பாற்றப்பட்டார்.

விமானம் 14 ஆயிரம் அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்தபோது, யன்னல் எதிர்பாராமல் வெடித்து உடைந்து சிதறியது. அதைஅடுத்து உள் நோக்கி உந்தி வீசிய காற்றினால் ஜன்னலுக்கு அருகே அமர்ந்திருந்த பயணி வெளியே தூக்கிவீசப்பட்டார்.

அவரது தலையும் ஒரு கையும் விமானத்துக்கு வெளியே இழுக்கப்பட்டது. இத் தருணத்தில் விமானப்பயண உதவியாளர்களும் சக பயணிகளும் பகீரத பிரயத்தனம் செய்து அவர் வானவெளியே தூக்கிவீசப்படாதபடி உள்ளே இழுத்துக் காப்பாற்றப்பட்டார்.

சமீபத்திலுள்ள விமானநிலையத்தில்விமானம்தரையிறக்கப்பட்டது. பயணிக்கு உடனடியாக முதலுதவி அளிக்கப்பட்டு, காப்பாற்றப்பட்டார். (அ)

## தமிழருக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மானதாக மாறும் என்பதில் சந்தேகமே இல்லை''

ஈழவர் ஜனநாயக முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் திரு. ரட்ணராஜா அவசர காலச்சட்ட நீடிப்பு விவாதத்தின்போது இவ்வாறு இனவாத அரசியலின் ஆபத்துக் குறித்து எச்சரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

ஆரம்ப காலத்தில் இனவாத அரசியல் தமிழ்ப்பேசும் மக்களை மாத்திரம் பாதிப்பதாக இருந்தது. இன்றே இப்பிரச்னை தேசிய பிரச்சனையாகிவிட்டது. ஆகவே இன்று நிலவும் நல்ல சூழ்நிலையை பயன்படுத்தி பிரச்சனைக்கு நிரந்தர தீர்வுகாணவேண்டும்.

இனவாத அரசியலின் ஆபத்துக்கள் குறித்து ஆழ்ந்த அரசியல் ஞானம் மிகுந்த அரசியல்வாதிகளான டாக்டர் என். எம் பெரேரா, டாக்டர்கொல்வின் ஆர். டி. சில்வா, சேர் நிஸங்கா போன்றவர்களின் பேச்சுக்களை திரு. ரட்ணராஜா ஆதாரம் காட்டி உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:-

இனத்துவேஷம், ஹிட்லர், முசோலினி போன்றவர்களுடன் முடிந்துவிட்டது என்று நினைத்தேன். பிரஜாவுரிமைச் சட்டம் இத்தகைய இனத்துவேஷத்தையே உண்டு பண்ண முயலுகிறது என்று 1948ம்ஆண்டில் டாக்டர் என். எம். பெரேரா எடுத்துரைத்தார்.

இந்தப் பிரஜாவுரிமைச் சட்டமானது, இனத்துவேஷம் என்னும் மண்வெட்டியால் தோண்டப்படும், சவக்கிடங்காகும். என டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா வர்ணித்திருந்தார்.

ஆகவே படித்த இந்த அரசியல்வாதிகளின் அனுபவ எச்சரிக்கைகளை மனதில் கொண்டு இனப் பிரச்சனைக்கு நிரந்தரமான தீர்வுகாண அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் என்றும் திரு. ரட்ணராஜா கேட்டுக் கொண்டார். [அ]

## விடுதலைப்புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கிறது.

இப்பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித்தலைவர் திரு. கரிகாலன் மற்றும் திரு. நியூட்டன், திரு. மகார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளையில் களுவாஞ்சிக்குடியில் சில தினங்களுக்கு முன்னர் மூடப்பட்ட இலங்கை இராணுவ முகாம் இப்போது மீண்டும் திறக்கப்பட்டுள்ளதும் கடந்த சில தினங்களாக மட்டக்களப்புப் பகுதிக்கு அடிக்கடி விமானங்கள், ஹெலிகொப்டர்கள் வந்து செல்வதையும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. (121)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு வைகாசி மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.